வெளிச்சம்

விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக்கழகம்



கவிதைச்சிறப்பிதழ்

- எதிரியை விட துரோகிகளே மிகவும் ஆபத்தானவர்கள்

  தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனின் குறிப்புக்கள்

- நேர்காணல்

  கவிஞர் சோ. பத்மநாதன்

- மதிப்பீட்டுரைகள்
  - 'UNBROKEN CHAINS' [உடையாத விலங்குகள்]
  - 'காலம் எழுதிய வரிகள்'

- 35 கவிஞர்களின் நிகழ்காலத்தை நெஞ்சில் பதிக்கும் கவிதைகள்

ஐப்பசி - 1994

விலை 25/-

பண்டிதர் நூலகம்
மா நகர சபை
யாழ்ப்பாணம்

காதலே......உன்னதம்
காதலே பரிபூரணம்
காதலே நேசிப்பின் நீலாவரை
ஆதலால் மானுடனே!
காதல் செய்வாய்.
காதலிப்பதென்று முடிவெடுத்து விட்டாயானால்
யாரைக் காதலிக்கலாம்?
எதிர்ப்பாலார் மீதான காதலெல்லாம்
இங்கு காமம்கலந்தே விற்பனையாகிறது.
தோலில் சுருக்கம் விழுந்தவுடனேயே
அதிகமான "காதல்கள்"
அஸ்தமனமாகி விடுகின்றன.
தெருநாயும் காதலித்தே கலவி செய்கிறது.
இதில் தெய்வீகம் இருப்பதென்பதெல்லாம்
சுத்தப் பம்மாத்து.
வேறெதைக் காதலிக்கலாம்?
அட மானுடனே!
தாயகத்தைக் காதலிக்கக் கற்றுக்கொள்.
பெற்றதாய் சுமந்தது பத்துமாதம்,
நிலம் சுமப்பதோ நீண்டகாலம்.
அன்னைமடியிருந்து கீழிறங்கி
அடுத்த அடியை நீ வைத்தது
தாயகத்தின் நெஞ்சில் தானே!
இறுதியில் புதைந்தோ
அல்லது எரிந்தோ எருவாவதும்
தாய்நிலத்தின் மடியிற்தானே!
நிலமிழந்துபோனால் பலமிழந்துபோகும்
பலமிழந்து போனால் இனம் அழிந்துபோகும்.
ஆதலால் மானுடனே!
தாய்நிலத்தைக் காதலிக்கக் கற்றுக்கொள். □□

— மாலிகா

பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்றம்
-8-11-1994

வெளிச்சம்
ஐப்பசி 1994
இதழ் - 30

தென்னிலங்கைக்கு மீண்டும் யாரோ தீமூட்டி விட்டார்கள்.
மனிதக் குண்டென்று சொன்னார்கள்.
யார் கண்டது?
நினைவிருக்கா?
''அந்த ஆமர்வீதி''க்கு அருகில்தான்
பாலத்துறையடியில் காமினி கண்மூடிப் போனார்.
வெடிகுண்டு என்றாலே... விடுதலைப்புலிகள் என்பது
இங்கே அடிக்கடி உச்சரிக்கும் மந்திரமாகிவிட்டது.
ஊகங்கள் உண்மையானவை அல்ல...
இது காகங்களுக்கு எப்படித் தெரியும்?
சும்மா கத்தித் தொலைக்கின்றன.
வெடிகுண்டு சுமப்பதுதான் விடுதலைப் புலிகளுக்கு வேலையா?
எவன் வைத்த குண்டோ? எவனுக்குத் தெரியும்?
எவனென்று அந்த எமனுக்குத் தெரியும்.
என்றாலும் எங்களுக்கு எள்ளளவும் துயரமில்லை.
காமினியை எண்ணிக் கண்ணீர் வரவில்லை.
எப்படி வரும்?
மனிதனாக அந்த மனிதன் நடக்கவே இல்லை.
எதிரிக்குக்கூட ஒரு இலக்கணம் இருக்கிறது.
இந்த 'மாவலிராஜனுக்கு' அதுகூடக் கிடையாது.
1981 ம் ஆண்டு ''தீவைப்பு''
இன்று நினைத்தாலும் நெஞ்சில் நெருப்புப் பிடிக்கும்.
தூரத்தில் காணும்போதே தொட்டு வணங்கச் சொல்லும்
பேரறிவுக் கோவிலுக்கு...
ஈழத்தமிழர்களின் வாழ்வின் சுவடுகளை
பேணிவைத்திருந்த பொக்கிஷத்துக்கு
அனுமான்கள் வாலில் தீயினைமூட்டி
எரிக்கச் சொல்லி கட்டளையிட்டு
கிட்டநின்று ரசித்தவர் தானே
இந்தக் 'காமினி வீரர்'
1983 ம் ஆண்டு ''தமிழர் சங்காரம்''
தென்னிலங்கைத் தெருக்களில் குருதிவழிந்து
களனியில் கலந்தது
பூவும், பிஞ்சும், காயும், பழமும்
தமிழரென்றதால் தணலிடை வெந்தன.
குத்திக் கிழித்தும், குதறிக் கடித்தும்

பற்கள் பதிந்த முகத்துடன்தான்
தமிழச்சி கப்பலில் வந்தாள்.
மலையகம் முழுவதற்கும்
இந்தத் 'தமிழர்சங்காரத்துக்கு' யார் தளபதி?
'வீரச்சிங்கம் காமினி'தான்.
மாவலி அபிவிருத்தி என்ற பாசாங்குடன்
காமினி காணி அமைச்சர் ஆனார்.
அடைய, அடைய அண்டாத வயிறுடைய
குண்டோதரன் இவரே.
தமிழர் தாயகத்தை விழுங்கி ஏப்பமிட்ட அசுரன்.
வடக்கையும், கிழக்கையும் இணைக்கும் இதயத்தில்
காமினிதான் சிங்களவருக்குப் பூமிகொடுத்தார்.
மணலாற்றில்
பொடிமெனிக்காவை கொண்டுவந்து
குடியேற்றியதே "காமினிராசா" தான்.
தமிழனை தான் கொழுத்தியது மட்டுமல்ல......
பக்கத்து வீட்டுக்காரனையும் பங்குக்கு அழைத்து
குடல்க்கறி சமைத்த கோரமனிதன்.
இலங்கை, இந்திய ஒப்பந்தமென்று
'கிழட்டுநரி' விடுதலைப் புலிகளுக்கு...
குழிதோண்டி வலைவிரித்த போது
கால்நடக்க முடியாத நரியுடன் சேர்ந்து
தமிழனுக்கு கண்ணிவெடி வைத்ததே
இந்தக் காமினி தான்.
'வானரச் சேனை'யை வேலிக்குள் அழைத்து
தமிழரின் மாமிசம் கொடுத்த 'மகராஜன்'
இந்தக் காமினிதிஸநாயக்கா தான்.
ஊகங்கள் உண்மையானவை அல்ல ..
இது காகங்களுக்கு எப்படித் தெரியும்?
சும்மா கத்தித் தொலைக்கின்றன.
எவன்வைத்த குண்டோ? எவனுக்குத் தெரியும்?
எவனென்று அந்த எமனுக்கே தெரியும்.
காமினியை எண்ணிக் கண்ணீர் வரவில்லை
எப்படி வரும்?
மனிதனாக அந்த மனிதன் நடக்கவே இல்லை.

எதிரியை விட துரோகிகளே மிகவும் ஆபத்தானவர்கள்.

''நாம் எமது விடுதலைப் பயணத்தை ஆரம்பித்து முப்பது ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. விபரிக்கமுடியாத துன்பங்களும் வியக்கத்தக்க தியாகங்களும் நிறைந்த ஒரு மகத்தான வீர காவியமாக எமது விடுதலை வரலாறு நீண்டுசெல்கிறது. இரத்தத்தால் எழுதப்படும் எமது இனத்தின் விடுதலை வரலாறு மனித குலத்தின் விடுதலை எழுச்சிக்கு ஒரு உன்னத எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

உலகில் எங்குமே நிகழாத கொடுமைகள் எம்மீது கட்டவிழ்த்துவிடப்பட்டன. மனித நாகரீகமே வெட்கித் தலைகுனியுமளவிற்கு எதிரி எம்மீது மிருகத்தனமாக நடந்து கொண்டான். எமது பழைய தலைமையின் துரோகத்தனம் காரணமாக, நம்பி, நம்பி ஏமாந்த வெகுளித்தனம் காரணமாக, நாம் என்றுமில்லாதபடி பாரிய அழிவுகளை சந்திக்கவேண்டியிருந்தது. தமிழின ஒழிப்பையே இலட்சியமாகக் கொண்டு செயல்படும் ஈவிரக்கமற்ற எதிரியுடன் கொஞ்சிக்குலாவி, சலுகைகள் கேட்டு, சமரஸ ஒப்பந்தங்கள் செய்து, சப்பாணிப்போராட்டம் நடத்தி, தமிழினத்தைப் பெரிய அழிவுப்பாதையில் இட்டுச் சென்ற பெருமை எமது காந்தியவாத தலைவர்களையே சாரும்.

குட்டக் குட்டத் தலைகுனிந்து, அடிமைகளாக, அவமானத்துடன் வாழ்ந்த தமிழனை, தலைநிமிர்த்தி, தன்மானத்துடன் வாழவைத்த பெருமை எமது விடுதலை இயக்கத்தையே சாரும். உண்மையில் எமது வீர சுதந்திரப் போராட்டம் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தோற்றத்திலிருந்தே ஆரம்பமாகிறது என்பதை எவரும் மறுக்க முடி

தமிழீழத் தேசியத் தலைவர்
திரு. வே. பிரபாகரன் அவர்கள்

யாது. கடந்த பத்து ஆண்டுகால ஆயுதப் போராட்ட வரலாற்றில் எமது இயக்கம் ஒப்பற்ற சாதனைகளை நிலைநாட்டியது. எத்தனையோ இடையூறுகள் மத்தியில், எத்தனையோ கஷ்டங்கள் மத்தியில், எத்தனையோ சோதனைகள் மத்தியில், சலிப்படையாது, நம்பிக்கை தளராது, இரும்பையொத்த உறுதியுடன் தொடர்ச்சியான, தீர்க்கமாக ஆயுதப்புரட்சிப்போராட்டத்தை நாம் முன்னெடுத்து வருகின்றோம். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற ஒழுக்கவிதிகளில் நெறிப்படுத்தப்பட்டு, அஞ்சாநெஞ்சம் படைத்த இலட்சிய வீரர்களை உருவாக்கிய எமது விடுதலை இயக்கம் இன்று முழு உலகமுமே வியக்கத்தக்க முறையில் சிங்கள

அரச பயங்கரவாதிகளையும் அவர்களுக்கு முண்டு கொடுத்துவரும் சர்வதேச நாசகார சக்திகளையும் தனித்துநின்று சமர் புரிந்து விரட்டியடித்து வருகிறது. விடுதலைப்புலி களின் வியப்பூட்டும் இராணுவசாதனைகள் காரணமாகவே இன்று எமது விடுதலைப் போராட்டம் உலக அரங்கில் மிகப்பிரசித்தி பெற்றதாக விளங்குகிறது. சமாதானப் பேச்சு என்றும், சமரஸத்திட்டம் என்றும்' போர்நிறுத்தம் என்றும் சிங்கள அரசு இன்று வெள்ளைக்கொடி காட்டுவதும் எமது போராட்ட சாதனைகளின் விளைவாகத் தான், இந்தப் பத்தாண்டு கால விடுதலை யுத்தத்தில் எமது விடுதலை வீரர்கள் நெஞ் சத்தைப் பிளக்கும் தியாகங்களைப் புரிந்த னர் மக்களின் விடுதலை என்ற ஒரே இலட் சியத்துக்காக, மக்களை இன அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்ற ஒரே நோக் கத்திற்காக, மக்கள் சுபீட்சமாக, நிம்மதி யாக வாழவேண்டும் என்ற ஒரே குறிக் கோளுக்காக இளம் புலிவீரர்கள் களத்தில் தமது உயிரை அர்ப்பணம் செய்து வருகின் றனர்.

இன்று வடக்கில் பல பகுதிகள் விடுத லைப் பிரதேசங்களாக எமது கட்டுப்பாட் டில் எமது நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. தமிழ்மக்களை நரவேட்டை ஆடிவந்த சிங்கள இராணுவம் முகாம்களுக் குள் முடங்கிக்கிடக்கின்றது. மக்களின் ஒரே பாதுகாப்பு அரணாக இன்று எமது இயக் கம் தமிழீழம் எங்கும் தன்னை நிலைப்படுத்தி பலப்படுத்தி வருகிறது.

தமிழீழத் தனியரசு என்ற எமது இலட் சிய நட்சத்திரம் அடிவானத்தில் பிரகாசிக் கத்தொடங்கியிருக்கிறது நீண்ட, கடினமான விடுதலைப் பயணத்தின் பயனாக நாம் சுதந்திர மலையின் சிகரத்தை அண்மித்துக் கொண்டிருக்கிறோம். எமது விடுதலை வர லாற்றின் இந்த முக்கியமான காலகட்டத் தில், எமது வெற்றிகளை நாம் நிலைப் படுத்தி விடிவை நோக்கி விரைந்து செல்ல வேண்டிய இந்த நேரத்தில், எமது போராட் டத்தை முறியடிக்கவும், எமது விடுதலை இயக்கத்தை அழித்துவிடவும், எமது எதிரி ஒருபுறமும், மற்றும் தீய சக்திகள் மறுபுற மூமாக சூழ்ச்சிகர நடவடிக்கைகளில் தீவிர மாக ஈடுபட்டுவருகின்றன. எண்ணற்ற தியா கங்கள் புரிந்து, எத்தனையோ உயிர்ப்பலி கள் கொடுத்து, இத்தனை ஆண்டுகளாக கண்ணீரும் வியர்வையுமாக நாம் கட்டி எழுப்பிய எமது வீர சுதந்திரப் போராட்டம் இந்த சக்திகார சக்திகளினால் இன்று ஒரு ஆபத்தான சூழ்நிலையை எதிர்கொண்டு நிற்கிறது. இந்த இக்கட்டான சந்தர்ப்பத் தில் நாம் விழிப்புடன் செயற்படத்தவறி னால் இத்தனை ஆண்டு காலமாக நாம் செய்த தியாகங்கள், நாம் புரிந்த சாதனை கள், நாம் அடைந்த வெற்றிகள், நாம் அனுபவித்த துன்ப துயரங்கள், நாம் கொடுத்த உயிரிழப்புகள், பொருளிழப்புகள், எல்லாமே அர்த்தமற்றவையாய் போய்விடு வதுடன் நாம் மீண்டும் அடிமை வாழ்வில் தள்ளப்பட நேரிடும்.''

(தமிழீழ மக்களின் தன்னாட்சி உரிமைப் போராட்டத்திற்கு விரோதமான முறையில் எதிரியோடு இணைந்து செயற்படும் இனத் துரோகிகள் மீது மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி, 1985-ம் ஆண்டு டிசம்பர் மாதம் தலைவர் வெளிவிட்ட அறிக்கையின் ஒருபகுதியை இங்கு பிரசுரிக்கி றோம்)

வெண்புறா சிறகுவிரித்து வெளியே வந்து
விரிந்த வானமெங்கும் திரியட்டும்.
அலகுகளில் 'ஒலிவ்' கிளை சுமந்து
தாளப்பதிந்து பறக்கட்டும்.
அவைபாடும் கானாமிர்தம்
எங்கள் செவிகளில் ரீங்காரமிடட்டும்.
குருதிவழிந்த சுவர்களெங்கும்
சமாதானத் தேவதையின் சாந்தமுகம் சிரிக்கட்டும்.
"நம்பிக்கைக் கனவின் நாயகர்கள்" வரும்

சுட்டுக்கடிக்கவா சுதந்திரம்?

புதுவை இரத்தினதுரை

"பறக்கும் பல்லக்கு"
"மலைவேம்பு வளவுக்குள்" அடிக்கடி இறங்கட்டும்.
படித்தவரும் பாமரரும்
'வானமரர்' வரும் இந்திரவிமானத்தை
தொட்டுப்பார்த்து முத்தமிடட்டும்.
எந்த நேரமும் 'தங்கை' வரலாம்.
அந்திமந்தாரப் பூவில் மாலைகட்டி
வந்திறங்கும் போது சூட்டுவோம்.
என்னதான் இருந்தாலும்
இரத்தஉறவை எப்படி உதறலாம்?

'கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால்
கைகொட்டிச் சிரியாரோ'?
யாரடா பாடுவது?
உள்ளதையும் கெடுக்கும் கொள்ளிக் கண்ணன் யார்?
அட நீயா?
முண்டாசுக் கவிஞன் பாரதியே!
உன்னை முன்னுக்கு வரச்சொன்னது யார்?
பொங்கிவரும் நேரத்தில் பானையைப் போட்டுடைக்கவா
வந்து நிற்கிறாய்?
போய்விடு.
சிட்டுக்குருவிக்கும் சுதந்திரம் தேடிய
– எட்டயபுரத்து அரசே!
நீவாழத்தெரியாத வகையினன்;
எங்களையும் குழப்பாதே, போய்விடு.

மின்சாரம்
நெடுஞ்சாலை
'சம்சாரம்' விரும்பும் சில சாமான்கள்
இந்தளவுமே மெத்தத் திருப்தி.
இதற்குமேல் சுதந்திரம் எதற்கு?
சுட்டுக்கடிக்கவா?
தீபாவளிக்கிடையில் தீர்வு வருமென்றால்
பாவாடை மலியும்.
பாத்திரங்கள் விலை குறையும்.
பெற்றோல் வந்தால் புதுக்கார் வாங்கலாம்.
தண்டவாளங்கள் இணைந்தால்
றெயிலேறிச் சாமான்கள் வரும்.
அடிக்கடி கொழும்பில் 'அலுவல்கள் பார்க்கலாம்'.
யாழ்தேவி தமிழரைச் சுமந்து செல்லும்.
திரும்பி வரும்போது 'சகோதரங்களை', அழைத்துவரும்.
நாகவிஹாரை வளவுக்குள்
தூபியுடன் கூடிய புத்தகோவிலில்
தாமரைத் தட்டேந்திச் சிங்களப் பெண்கள் சிரிப்பர்.
'காமினி ரீறூம்' கதவுகள் திறக்கும்.
கற்பனையே எத்தனை அற்புதம்.

'விதந்தரு கோடி இன்னல்
விளைந் தென்னை அழித்திட்டாலும்
சுதந்திரதேவி நின்னைத்
தொழுதிடல் மறக்கிலேனே!'

போரிடச் சொல்லிப் பாடுவதாரடா?
சுதந்திரம்பற்றிச் சொல்பவன் யாரடா?
என்ன திமிரிருந்தால் இப்படிப்பாடுவான்?
அதுவும் இந்த நேரத்தில்
யாரடா அவன்?
அட பாரதியா?
நீயின்னும் இங்கேயா நிற்கின்றாய்?
கவியரசே!
பாலுக்கும், சீனிக்கும், பருப்போடு மாவுக்கும்
நாலுக்கும்தானே நாங்கள் போரிட்டோம்?
ஏனய்யா உனக்கிந்தப் பொல்லாப்பு?
நீட்டோலைக்கிதுவல்ல நேரம்.
பாட்டரசே! உனக்கென்ன பாட்டு?
போய்விடுக!
'சும்மா வராது சுதந்திரம்' என்று
'சூரியத்தலைவன்' சொன்னதை மறந்தார்.
இன்னுயிர் இழந்து மண்ணுளே புதைந்த
கண்ணின் மணிகளின் கல்லறை மறந்தார்.
சிதறிப்போன வாழ்வை மறந்தார்
திசைகளுக்கொன்றாய்ப் பறந்ததை மறந்தார்.
மறப்பது எங்களின் மரபென ஆனதால்
கிடைப்பதில் மகிழ்வதே விடுதலை என்றார்.
பாரதியே!
அஞ்சற்க; வேங்கை அசையாது.
அனல் மூண்டு
பிஞ்செல்லாம் அதில் வீழ்ந்து பொசுங்கிடினும்
கல்லறையில்
கண்துஞ்சும் வீரர் கனவு நனவாகும்.
அஞ்சற்க; வேங்கை அசையாது.
போய் வருக!

இத்தனை துயரம் எத்தனை காலம்?

வேலணையூர் சுரேஸ்

பண்டைத் தமிழ்ப் பரம்பரையின்
பண்பாட்டுக்கு இலக்கான பூமியில்
நண்டைப் பிடித்து வந்து
நாலு பணம் உழைக்கும்...
தொண்டைத் தொழிலாகக் கொண்டவர் நிலமிது.
கொண்டைக்குப் பூச்சூடி
'கோடி' யழகு பார்த்திங்கே ...
இன்றைக்கு வழியின்றி இருப்பவர்போல் அல்லாமல்
வண்டைப்போல் தேன்குடித்து
வாழ்வு மணம்வீச வாழ்பவர் குலமது!
சண்டைக்கு எனச்சொல்லி அயலில்
வந்து குந்திய எதிரிகளால்
என்றைக்கும் துன்பமென்று தெரிந்திருந்தும்
அச்சமின்றி துயின்றுபழகிய ஊரதில்
அன்றைக்கும் அப்படித் தான்;
அழகான அவ்வூர் அமைதியாய்த் துயின்றது.
பாதியிரவின் பயணம் தொடர்கையில்தான்
எதிரி ஊதியனுப்பிய......
எறிகணை மோதி வீழ்ந்து வெடித்தன;
பீதியுற்ற உயிர்கள் எழுந்து துடித்தது.
நீதியற்ற செயலால் இங்கே.....
நின்ற மரங்கள் சரிந்து முறிந்தது
மூன்று குழந்தைகள் மூச்சை இழந்தது.
கன்றை இழந்த கறவை அழுதது.
அன்றைய கொடுமை அகன்றே சென்றது.
இத்தனை துயரம் எத்தனை காலம்?
என்று அவ்வூர் எழுந்து நிமிர்ந்தது...
ஒன்றல்ல... நூறல்ல... ஓராயிரம் கல்லறைகள்
இன்னும் எழுந்தகலும் பறுவாயில்லை!
நன்றல்ல என்று தெரிந்திருந்தும்
நாட்டிற்கு துயரிழைத்தவரை......
இன்றல்ல என்றைக்கும் விடமாட்டோம்; என்றதவ்வூர்.

மீளும் பொருட்டு

முருகையன்

கொட்டுண்டு கருகி விழுந்த
கொழுந்துகளே, இளந்தளிர்களே,
மொட்டாகி மலர்ந்து குலுங்கிய
மோகனங்களே, வாலிபங்களே,
சட்டென்று வீசிய சூறையில்
சாய்ந்து கிடக்கும் பழக்குலைகளே
வெட்டுண்டு துண்டுகள் ஆகி
விழுந்து சிதறிய சீவியங்களே,

உங்களை நாங்கள்
நினைவு கூர்கிறோம்
உயிர் கலந்து நாம்
உணர்வு சேர்கிறோம்

பலியாகி மறைந்து போயினீர்
பாழாகி மடிந்து போயினீர்
பலியாக்கி உயிர்கள் தந்ததால்
பலிபீடம் சிவந்து போனதால்,
பல காலம் நனைந்து போனதே!

பலியாகி மறைந்த உங்களின்
நினைவாலே மனது சோர்கிறோம்.

உங்களை நாங்கள்
நினைவு கூர்கிறோம்
உயிர் கலந்து நாம்
உணர்வு சேர்கிறோம்

ஊழித் தாண்டவம்
முடிந்து போயினும்
உயிர்ப்பு மீளவும்
நிகழ வேண்டுமே!
வாழ்வுக் கூத்தை நாம்
ஆட வாழ்கிறோம்.
வலிமை நோக்கி நாம்
பயணம் ஆகிறோம்
உயிர்ப்பு மீளவும்
நிகழ வேண்டுமே!
உணர்வும் ஆவியும்
இழைய வேண்டுமே!
அயர்ச்சி, சோர்வுகள்
அகல வேண்டுமே!
அமைதி வாழ்நிலை
மலர வேண்டுமே!

உங்களை நாங்கள்
நினைவு கூர்கிறோம்
உயிர் கலந்து நாம்
உணர்வு சேர்கிறோம்.

போகாது கற்பென்றிங்கே கும்மியடி

வீ. பரந்தாமன்

கூட்டைத் திறந்துமே வந்திட்டோம்—பெண்ணே
கூடியே நின்று நல்ல கும்மியடி!
வீட்டுப் புகையிலே வெந்து சுருளாமல்
வெளியில் நடந்தோம் என்று கும்மியடி!

ஏட்டைப் படித்தின்பம் உற்றிட—நல்ல
எழுத்தை அறிந்து கொண்டோம் கும்மியடி!
நாட்டு நடப்புகள் நாலும் அறிந்திங்கு
நன்மைகள் பெற்றோம் என்று கும்மியடி!

மென்மை யொடுகற்பும் சொல்லியே—பெண்ணை
வீட்டுக்குள் பூட்டி வைத்த வீணர்தம்
புன்மை புரிந்தது பொங்கி எழுந்தனம்
போகாது கற்பென் றிங்கே கும்மியடி!

கையால் தொழில்செய்து வாழ்ந்திட்டால்—மற்றோர்
காலிலே வீழ்வ தில்லைக் கும்மியடி!
மெய்யாய் பலதுன்பம் விட்டு நீங்கிடும்
வீடெமக் குண்டாம் என்று கும்மியடி!

மானம் இழந்தாண்கள் காசுக்கு—நல்கும்
வாழ்வினை வேண்டோம் என்று கும்மியடி!
காதல் உளவொரு காளை கைகோத்துக்
கற்புடன் வாழ்வோம் என்று கும்மியடி!

ஆண்பெண் உறவாலே இல்லறம்—பூக்கும்
அன்பான வாழ்வி தென்று கும்மியடி!
வீண்தாழ் வுயர்வில்லை இன்பம் சமமாகும்
மேன்மைகள் காண்போம் என்று கும்மியடி!

நாட்டைப் புரந்திடும் வீரரை—என்று
நலமாய் வளர்ப்போர் நாங்கள் கும்மியடி!
ஆட்டம் இசைகலை யாவும் பயின்றின்பம்
ஆக்குவம் என்று பாடிக் கும்மியடி!

ஆளும் வெறிகொண்டு நின்றிட்ட—அந்த
ஆணவப் பேய்கள் தம்மை அழித்தெங்கள்
ஈழத் தமிழினம் வாழச் சுடுகலம்
ஏந்தியும் செல்வோம் என்று கும்மியடி!

உடைத்தெறி

மு. வே. யோ. வாஞ்சிநாதன்

பெண்ணே! நில்!
வயதென்ன உனக்கு?
இருபத்தெட்டா? இரு... ஒருகணம்!
இன்னுமேன் நீ இருக்கின்றாய்
திருமணம் செய்யாமல்?
போராடி நாட்டுக்காய்
புரட்சியினைப் படைக்கின்ற
புதுமைப் பெண்ணாகவும்—நீ
இருக்கவில்லை!... விரும்பவில்லை!
ஆனால்......
படலையைத் தாண்டினாய்!
படித்தாய்......
விடலைப் பருவத்தில்
விதம் விதமாய்
ஆடைகள் அணிந்தாய்;

கூடநல்ல 'டியூட்டறி';
கொண்டாடப் பள்ளிமர நிழல்;
ஆடவும் பாடவும் ஆங்கோர்
அரும்பெரும் மாதர்சங்கம்
இத்தனைக்கும் போய்வந்து
இன்பமுடன் மகிழ...
இல்லைத்தடை என்றால்
இன்னும் நீ கேட்பதென்ன?
சீதனத்தின் பிடியினிலே
சிக்கிமன வெக்கையினால்

கோதையுன் வாழ்வு
குமுறுவதைச் சொல்வாயோ?
உண்மைதான்... மறந்தே போனேன்;
சீதனத்தை... நெருப்புவைத்துக்
கொழுத்தவேணும்... அதற்குமுன்ஒன்று
உன்னிடம் கேட்க வேண்டும்!
ஒருசதமும் சீதனம்
கொடுக்காமல் உன்கழுத்தில்
தாலியினைக் கட்ட
தரமான இளைஞர்கள்
ஆயிரமாய் உண்டிங்கே;
ஆரணங்கே! நீ தயாரா?

தொல்புரத்தில் காணிவீடு......
கறிக்குப்பல தென்னைமரம்......
நெல்விளையும் நல்லதரை...
உள்ளவொரு பொடியனுண்டு!
நாள்முழுக்கச் சேற்றினிலே
கிடப்பதுதான் அவன்வேலை,
நல்லதோர் உழைப்பாளி;
பாடுபட்டுக் காலமெல்லாம்
வியர்வை சிந்தி...
சோறு போட்டுன்னைச்
சொகுசாக வைத்திருப்பான்;
சொர்க்கபுரிக் கிளிபோலக்
காலமெல்லாம் வாழ்ந்திடலாம்;
உன் முடிவென்ன? கூறு!

என்ன?...
ஓ... இனியபெண்ணே!
வாய்க்குள்ளே கசுகுசுக்கும் — உன்
வார்த்தையது கேட்கிறது!
ஆறாம் வகுப்புத்தான்
அவன் படிப்பா?... அதிலென்ன?
வீறான காளையொருவன்
சாறாகத் தன்னைவருத்தி
வாழ்வினிலே நிமிர்ந்து நிற்கையிலே
கல்வியினை வைத்து நீ
கற்பூரமா கொழுத்தப் போகிறாய்?

வயற்காரன் வேண்டாமா?
வேறென்ன வேண்டும்?
நாளொன்றில்...
ஐநூறு உழைக்கும்
நல்லிளைஞன் ஒருவனுண்டு;
தோல்சிகப்பு... நல்லழகன்;
பனையேறிக் கள்ளிறக்கி
பாடுபட்டுக் காசுழைக்கும்
உன் நாட்டு வங்கியவன்
வேண்டுமா உனக்கு?
சீ... வேண்டாமா?
என்ன சீற்றமிது?
சாதிகுறைவா? நாள்முழுதும்
பாதியாடையில்
பவனிவரும் ஆளென்று
ஏளனம்வேறு செய்கிறாயா?.....

என்ன அகந்தையடி உனக்கு?
அடிபெண்ணே!
இருபத்தியெட்டைக் கடந்துவிட்ட பின்னும்
தரம்பார்க்கும் தாரகையே!
தவறெல்லாம் யாரிடத்தில்?
ஆடவர் மீது .. அத்தனை
குற்றங்களையும் சுமத்திவிட்டு
அமர்ந்திருக்கும் ஆடலணங்கே!

யாழ்ப்பாண மண்ணில்
அவதரித்த கப்பல்வாழைச்
சீப்பெல்லோ நீ?
டொக்டர் .. என்ஜினியர்...
அட்வகேட்... விஞ்ஞானி...
அதுவும் இல்லையேனில்—நிரந்தரமாய்
வெளிநாட்டில் 'விசா' பெற்ற
வாலிபனன்றோ நீதேடும் வரன்?

ஆண்டாண்டு காலமாய்
அழுது... புரண்டு...
இலட்சங்கள் பலசேர்த்து...
வேண்டுவது நீ இதைத்தானே?
இப்போது சொல்...!
உடைக்கவேண்டிய அடிமைத்தளை
ஆணிடம் மட்டுமல்ல;
உன்னிடமுமுண்டு — அதைமுதலில்
உடைத்தெறி!

வெளிச்சம் இதழுக்கான கவிதைகள், சிறுகதைகள், மற்றும் கலை, இலக்கியம் தொடர்பான கட்டுரைகள் என்பனவற்றை எதிர்பார்க்கின்றோம். படைப்புக்களை அனுப்பவேண்டிய முகவரி:

வெளிச்சம், விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்
நடுவப்பணியகம், கோண்டாவில்.

துள்ளிய மீன்குஞ்சே! உன் துடிப்பு...

கடல் அலையின் நுரை சிதறிக்
காய்ந்த பெரும் மணல் வெளியில்
அங்காந்த வாயும்- உன் அவலமுமாய்......
வான் பார்த்து...
என்னுறவு இன்று... எங்கே?— என் (று)
ஏங்குவதாய்...
செந்நீரின் சேற்றில்... சிறகிறுகிப்
பூ... வாடி,
உயிரின் துடிப்பும் உள்ளுணர்வும் அடங்கிய — ஓர்
உருவாய்... இல்லை; வெறும் உருக்குலைந்த
சடலமென......
குண்டின் இரவதிர்வில்... கூடழிந்த குருவியென...
....
நிலவொளியின் மேலாய்... என்
நினைவறையின் உட்புகுந்து...
துள்ளிய மீன் குஞ்சே...!— நீ
துயிலுதற்காய்ப் பாடிய நான் ..
தூங்காமல்......!

மாயவெறும் வலையில்—மறந்து
மறந்தலைந்து...
உள்ளடங்கி ஒன்றாய் உயிரழியும்
சீவியத்தை......
ஏற்காது நீயும்...... என்போல்
'எதிர்நீச்சல்' போட்டனையோ...?

ஈழக் கடல் எமக்கு இனிமை தரா (து) என்று
அகன்று......
போனவுன் சுற்றம்...... இனிப் புலம்பும் ..... நீ
'வருமுன் காக்க' வகையறியாய் .. என்றலம்பும்!

வலையை அறுத்துனது வழிதொடரும் சந்ததியின்
'உணர்வலையை'க் கண்டெனது... உளம் நிமிரும்...!

நாக. சிவசிதம்பரம்

சிவப்பு விடியல்

விடியலின் விளிம்பில் நாம்!
மனமே விரக்திகொள்ளாதே.

நீளும் பாதையைத்
தாண்டுவோம்.
கற்களையும் முட்களையும்
கால்களாக்கிக் கொள்வோம்!
உறக்கம் எம்மை
இறக்க வைத்து விடும்!
சோம்பல் எம்மை
சாம்பலாக்கி விடும்.

எழுவோம்!
விரல்களில் என்ன?
எமது விழிகளிலும்
துப்பாக்கி கனல் கக்கட்டும்!

உரிமைக்காக உயிர் விடுவது
உன்னதமானது.
தியாகம் இங்கு
தேய்ந்து போகாது.

அணி திரளுங்கள்!
களத்தில் எதிரியின்
கழுத்தை நெரிப்போம்!
நாளைய சூரியன்
சிவப்பாய் விடியட்டும்!
இந்த விடியலே எமக்கு வேண்டும்!

மானிலா

தலைமுறைகள்

இயல்வாணன்

தாத்தாவும் அப்பாவும்
வாழ்ந்த வாழ்க்கை
என்னிடமில்லைத்தான்!

தாத்தா பால் தயிரும்
வரகரிசி எனவெல்லாம்
வாய் நிறையத் தின்றார்கள்.

அப்பா தேயிலை கோப்பியும்
கோதுமையும் பாணுமாய்க்
குறைவற்றுத் தின்றார்கள்.

எனக்கு நிவாரண
'அம்மாப்பச்சை' அரிசி தான்
சில வேளை அதுவுமில்லை.

தாத்தா நாற்சார வீட்டில்
அப்பா சீமெந்து விட்டில்
இன்றெனக்கோ வீடில்லை.
அகதி முகாமே சொந்தமென.

தாத்தா மலாயன் பென்சனியர்
அப்பாவும் அரசாங்கப் பென்சனியர்
எனக்கென்று ஒன்றுமில்லைத்தான்.

தாத்தா வெள்ளையனுக்கு அடிமை
அப்பாவோ சிங்களவனுக்கு அடிமை
நானோவெனில் யாருக்குமில்லை.

புரட்சி

இளந்திரையன்

நித்திரையின்றி நான்
நிலவில் எரிகையில்
தேசத்தின் மௌனம் ஒப்பாரி இடுகையில்..
ஏனென்று கேட்க நான் பயந்தேன்!

எனது வீடு
உறவுகளோடு எரியூட்டப்படுகையில்,
பற்குதறற் போர்வையுள்
உயிர் பிடுங்கிய காயங்களுடன்,
சிவப்பாக்கப்பட்ட
வெள்ளைச் சீருடையின் அருகே,
குடல் சிதறிப்போன மாட்டின் பக்கம்,
தெருவில் என் தங்கையின்
உடல் கண்டு அழ முனைந்தேன்!
வாய் திறந்தால் "வெடி" என்றார்!

நெஞ்சு நிறைந்து
ரவைகளாய்க் குத்தும் வேதனைகளை
எழுத்தாய் இறக்கிவிட அமர்ந்தால்
என் உயிர் போகும் என்றார்!

எல்லாம் சேர்ந்து குமைந்து
இதயம் வழி
நாடி, நாளமெங்கும்
கண்ணீர் புடைத்தோட
என்னுள்ளே நானிங்கு வெடிக்கிறேன்!

அவர்களின்
தலைமைச் செயலகச் செவிப்பறை கிழிய,
சிவனொளிபாத மலையிலும்
எதிரொலிக்கும் படியாய்
ஏனென்று கூவ நான்
துணிந்தேன்!
துணிந்தேன்!

தாயகம் மறந்த நண்பன்

வளவை வளவன்

ஓ ..
என் இனிய நண்பனே!...
ஆவலாய் ஊர்ப்புதினம்
கேட்டிருந்தாய்?...
எல்லாம்
இருந்த இடத்தில் — தான்
இருக்கின்றன...

நல்லூர்
திருவிழா நடக்கிறது ..
''பள்ளி''யும் ஒழுங்காக
நடக்கிறது...
பொம்மை வெளியில்
''பட்டம்'' ஏற்றுகிறேன் தான்
எல்லாம் வழமை போல்
இயங்குகின்றது...
கடல் பொங்குகின்றது - ஆனால்
''புலம்'' பெயரவில்லை...
முற்றத்திலே ''வெள்ளிநிலா''
சுற்றம் எங்கும் வயல்வெளி...
உன் வீட்டு
ஒழுங்கையில் நின்ற
''ஆல மரம்'' எல்லாம் இருக்கிறது.
ஒன்றும் குடி பெயரவில்லை...
இருந்த இடத்தில் தான் ..
ஆனால்! நீ --
மட்டும் இடம்
மாறி நாறிப் போய்
விட்டாய்...

நீ தொழுத ஆலயமும்...
திரிந்த பாதையெல்லாமும்
''ஷெல்''லுக்கு பயந்து குடி
பெயர்ந்து விட்டதா...?
''இமயம்'' முதல் ''குமரி'' வரை
தமிழன் ஆண்ட கதை
நீதானே சொன்னாய் - ஆனால்
''சமயம்'' பார்த்து ''கனடா''
பறந்து விட்டாய்...
உனக்கு ஒன்று மட்டும்
சொல்கின்றேன்.

''நாங்கள்''
நெருப்பில் தான் உறங்குகின்றோம்.
அனல் காற்றை சுவாசிக்கின்றோம்.
வெந்நீரில் நீந்துகின்றோம்
ஆனாலும்
''இருப்பிழந்து'' போகாமல்
இருக்கின்றோம்... ☐☐

பேசிப் பார்ப்போம்

குண்டுகள் காவிச் சென்று
கொட்டி; எம் மாற்றார் தேகம்
துண்டுகள் ஆக்கிப்; 'பாதை'
'துடைத்த' .. தூ யவரின் ஈகம்
கண்டு; கண் ணீரின் வித்தால்,
கவிப்பயிர் செய்ய .. வார்த்தை
கொண்டுநான் தோற்றேன்! 'பாவில்'
குறுகிடார் .. ; பெருமை தேர்ந்தேன்!

அண்ண [ன்] செய் யாகப் போரில்
'அஸ்வமாய்'... வீழப்..போட்டிச்
சண்டைகள் இட்டோர்; 'லொத்தர்'
தம்பெயர் சொல்லின் — ஆடி,

நண்பரைத் தொட்டோர்; அந்த
'நாள்' மகிழ் வோடே .. சாதல்
இன்பமாய் ஏற்றோர்; என்ன?
இரும்பரா...? பூக்கள் ஐயா!

வாலிபக் கிளர்ச்சி நாளின்
வசந்தத்தில்; நெருப்பு மூட்டி
தாலி மண் ணுக்கே கட்டி
தவறிடா திலக்கைத் தாக்கி
காலிரண் டில்லா... அந்தக்
கடைசி; 'தா யகமே காதல்'
வேலிக்குள் 'கசிந்து' சொல்லி
வெடித்தவர்; உணர்வு என்னே?

'தாய்முலை வரண்ட போது
தன்னலம், இன்பம் எண்ணிப்
பாய்ந்தவர்; பதவி பார்த்துப்
பணிந்தவர்; சாவுக் கஞ்சி
நாய்களாய்ப் போனோர்' முன்னே,
நாயகர் இவர்கள், இந்தத்
தாய் மடி பிறந்து வந்தெம்
தலைநிமிர்த் திட்டார்; வென்றோம்!

வெள்ளமாய்க் குருதி வார்த்தோம்
விலைகொடுத் தோமே ? நேற்று
முள்ளிலே பாதம் வைத்தோம்,
முளைத்தெழுந் தோமே ! சும்மா
கள்ளமாய்ச் சலுகைக் காக
'காய்களை'.. நகர்த்தி, முன் போல்
'தள்ளலாம்'... நினைக்கா தீர்கள்
சந்ததி புதுசுஇன் றிங்கே!

அண்டமே எதிர்த்தும், ஈழம்,
அதிர் 'உயிர் வெடிகள்' தாங்கி
'சுண்டிடும்'; பலத்தால் வெல்லும்
சூரமண்; பகைவா...? வீழ்ந்தோர்
கொண்டநம் பிக்கை உரிமை
குலைந்திடா... முடிவா? ஏற்போம்.
சந்தனஞ் சாத்திச் சொல்வோம்
சம்மதம்; பேசிப் பார்ப்போம்; □□

த. ஜெயசீலன்

சாவும் நாமும்

தா. இராமலிங்கம்

சாவு இப்போது எமது சகதோழன்
சொந்தம் பாராட்டி
இரவுபகல் எம்மோடு தங்கிநின்று
நித்தம் அவனுக்கு
கும்மாளம் விளையாட்டு

நாம்போகும் பாதை எல்லாம்
தட்டுமறித்துத்
தடுத்து விளையாடுகிறான்
ஆட்டத்தில் வல்ல
வீரர்பலர் வீழ்ச்சியுற
வெற்றிக்குமேல் வெற்றி
ஈட்டிக் குவிக்கின்றான்.

வெட்டுண்டு வீழ்ந்தவர்கள்
வெடிபட்டு வீழ்ந்தவர்கள்
எரியும் நெருப்பினிலே
சுருண்டு மடிந்தவர்கள்...
பட்டுவிட்டோர் பட்டியலோ
நீண்டுகொண்டு போகிறது.

என்றாலும்
எம்மோடு அவனுக்குப்
பிணைப்போ பெரும் பிணைப்பு.
ஒரே இலையில் நாங்கள் ஒன்றாக உண்ணுகிறோம்
ஒரே பாயில் நாங்கள் ஒட்டி உறங்குகிறோம்
கைகோர்த்துக் கொண்டு கடைவீதி சுற்றுகிறோம்.

சாவு நமது சகதோழன் இப்போது

நாளை நாம் வெற்றி
ஈட்டிக்குவிப்பதற்கு
சாவு இப்போது
இரவுபகல் பாராது
தேர்ச்சி அளிக்கிறான்.

□□

தாத்தாவும் பேரக்குழந்தையும்

இளையவன்

கிட்டுமாமா பூங்கா
பார்க்கப் போவம்
எட்டி நட! தாத்தா
எட்டி நட!

பேரக் குழந்தை இழுத்த இழுப்பில்
பொக்கை வாயால் சிரித்தபடி
தாத்தா போகிறார்.

வாளேந்திய சங்கிலியனின்
தாழ் பணிந்துமே தாத்தா நிற்க
பேரக் குழந்தை உள்ளே போனது

மேலும், கீழும் போய்வரும்
சீசோ ஆடி மகிழவோ,
வீசி ஆடும் ஊஞ்சலில் ஏறி
விண்ணைத் தொட்டு வரவோ,
மலை முகட்டில் ஏறி நின்று
மண்ணைப் பார்த்துச் சிரிக்கவோ,
தொங்கு பாலத்தில் மெல்ல ஊர்ந்து
சீமெந்து தரையில் சறுக்கிப் பார்க்கவோ,
குழந்தை போவதாய் எண்ணிய தாத்தா
ஏமாந்து தான் போனார்.

மகிழ்ச்சியை விற்கும்
'சதுட்டு உயண்' வை
மனத்தில் இருத்திய தாத்தா
பூங்காவின் புல்வெளிகளில்
பேரனைத் தேடினார்
ஊஞ்சலில் பார்த்தார்.
சறுக்கி விளையாடும்
சிமெந்து வளைவுகளில்
ஐஸ்கிறீம், சொக்லேட்
விற்கும் கடையின் வாசலில்
சுற்றிச் சுழலும் மெரிக்கோ ரவுண்டில்
மேலும் கீழும் போய் வரும் காரில்
ஸ்பிறிங்கில் இயங்கும் குதிரையில்
எங்குமே அவன் தலை தென்படவே இல்லை.

வருத்தம் மேலிட தாத்தா ஒதுங்கி
ஓரமாய் போனார்.

யாழ்தேவி என ஓடிவந்த
இரும்புப் பூதம்
அடிபட்ட நாகம் போல்
இறந்து போய் கிடந்தது.
அனலைப் பொழிந்த குழாயின் நுனியில்
பேரக் குழந்தை சறுக்கி மகிழ்ந்தது.
கோடி கோடியாய் பணத்தைக் கொட்டி
கொழும்பு வாங்கிய இரும்புப் பூதம்
ஓடி ஓடி உழைப்பவர் செயலால்
குழந்தைகளுக்கோர் குதூகல பொருளாய்.

"சங்கிலியன் இருக்கும்
கற் குதிரையல்ல இது
எங்கள் தலை முறையின்
குருதியில் வாங்கிய
இரும்புக் குதிரை"
குழந்தையின் வார்த்தையில்
பூரித்துப் போனார் எங்கள் தாத்தா.

உயிர்க்குரல் கேட்க வேண்டும்

உதயலட்சுமி

வான்கிளம்பி இசைமீட்டும் பறவைகள்,
ஓங்கி வளர்ந்த
ஒய்யாரமான மரங்கள்,
ஒரு முறை தாவி வந்து
நிலவோடு விளையாடும் முகிற் பொதிகள்
எங்கும் நிறைந்து
அழகு செய்த போதெல்லாம் — நான்
அடுத்த தேசத்தை
ஒரு நாளும் நினைத்ததேயில்லை.

இரவும் உறங்குகையில்—நான்
விழித்திருந்து வியக்கிறேன்.
எப்படி இதைவிட்டு
எங்கேயோ போகிறார்கள்?

முந்தியொரு பொழுது சந்தை சலசலக்கும்.
கோயில் மணியோசை
ஊரெல்லாம் தவழ்ந்து வரும்.
புழுதிக் கடலோடு
மழலைப் படைகள்.
கர்சான் கார ஆச்சிக்குக்
கல்லெறிந்த சம்பவங்கள்
ஊளையிட்டபடி திரியும் சொறிநாய்......
ஏன் அந்தவீதி வெறிச்சோடியிருக்கிறது?

அமைதியின் பிடியில் அந்தரிக்கும்
அந்த ஊரைப்பற்றிய
எனது கற்பனைகள் விரிந்து செல்லும்.
இறுகத் துவக்கை அணைத்தபடி கிடக்கும்
எனது தோழிக்கும்
இப்படித்தான் தெரியுமோ?

காவல் நேரத்தில்
எனது கண்களுக்குள்

விரிந்து கிடக்கும் — அந்த
ஊரைப்பற்றிய காட்சிகள்
ஓ......
எனது கிராமமும்
இப்படித்தான் தனித்திருக்கும்.
குட்டிப் பிசாசுகள்
குந்தியிருப்பதுபோல்
மண்மூடை பொதிந்த எதிரியின் காப்பரண்
அதற்கு முன்
துப்பாக்கியோடு தனித்திருக்கும்
என்னைப் போல் ஒருத்தி.
அவளின் கண்களுக்குள்
பழமை சேர்ந்த காட்சி
சங்கிலித் தொடர்போல
அவளுக்கும் நினைவுகள் ..
ஓ...... எவ்வளவு கொடுமை.
தூக்கத்திற்கு நடுவிலும்
எனக்கு வியர்க்கிறது.
விழித் தெழுந்த போது
விழிகள் நனைந்திருப்பது புரிகிறது

தூரத்தில் ஒரு நாயின் குரைப்பொலி ..
விட்டு விட்டு எரியும்
ஒளித்தெறிப்பு
பழகிப்போன எனது அந்த வாழ்க்கையில்
பசுமையே இல்லை.
''அடுத்த முறை 'அடியோடு'
முன்னுக்குச் சென்று நிலைப்படுத்த வேணும்''.
விடுபட்ட அந்த ஊருக்குள்
உயிர்க்குரல் கேட்பதாய்
எனக்கு நினைவுகள்
தரித்திருக்கும் இடத்திற்காக
என்னுள் விரியப் போகும் கனவுகளோடு
அடிக்கான ஆயத்தங்கள்...

அதன் முடிவில் வரப்போகும்
இன்பப் பெருக்கோடு
நானிருந்து கனவு காணலாம்.
இல்லாவிடிலென்ன?
எனது கற்பனைகளோடு
இன்னொருத்தி இங்கிருப்பாள்.

ஆயினும் அந்த ஊர்
ஆனந்தப்பட வேண்டும்.

□ கவிதைச் சிறப்பிதழ் □

புளிய மரம்

ச. முருகானந்தன்

வானத்தை நிமிர்ந்து பார்த்தால் - அதன்
வர்ண ஜாலங்களா தெரிகின்றன?
இயந்திரக் கழுகுகளல்லவா இதயத்தை நெருடுகின்றன.

அறுவடைக்குத் தயாரான பயிர்களெல்லாம்
அரக்கர்களால் எரிக்கப்பட்டுவிட்டன.
பயிர்கள் மட்டுமா?...... உயிர்களும் தான்!

உங்கள் கிராமங்களில் வீடுகள் உருவாக்கப்படும்போது
எங்கள் கிராமங்கள் நிர்மூலமாக்கப்படுகின்றன.
பத்து லட்சம் வீடுகள் கட்டப்படுவதாக
ஐ.நாவில் நீங்கள் பீற்றிக் கொண்டிருந்தபோது
தரைமட்டமாக்கப்பட்ட எங்கள் வீடுகள் எத்தனை லட்சம்?
ஓ வீடமைப்பதில் மட்டுமல்ல, வீடுடைப்பதிலும்
நீங்கள் சர்வதேச சாதனையாளர்கள் தான்!

புனரமைப்பு, புனர்நிர்மாணம் என்று
எங்கள் மண்ணிலும் ஆக்கவேலைகளாம்!
எங்களுக்காகவா?
இல்லை! எங்கள் மண்ணில் உங்களுக்காக!

சோலை வனங்கள் எல்லாம் இங்கே பாலைவனங்களாகின்றன.
கிளி ஒன்று தனியாக அலறிக்கொண்டிருக்கிறது,-
தன் சோடிப் பறவைகளைத் தேடித் தேடி!
சிட்டுக் குருவிகள் இரண்டு சுழன்று பறந்து கீச்சிடுகின்றன,-
தம் குஞ்சுப் பறவைகளுக்காக!

சோலைக் குயில்கள் இசை பாடித்திரிந்த
இனிய காலங்கள் மறக்கடிக்கப்பட்டுவிட்டன.
என்றாலும்...
சோகக் கவிபாடும் கானகத்து மயில்களாய்
சோர்ந்து துவண்டு போய்விட மாட்டோம்!

மீண்டும்... மீண்டும்... புதிதாய்... புதிதாய்...
வேலா வீட்டுப் புளி
வெட்ட வெட்டத் தழைக்குமாம்!

□□

என் பயணங்களை மீட்க

நாமகள்

நிலவற்ற இருண்ட வானம்
கன்னங்களை
உரசுகின்ற உப்புக் காற்றில்
தொலைவினை
நோக்கி நோக்கி
எரிவுறும் கண்கள்.

மண்மூட்டைகளிடையே
நீட்டிய
துப்பாக்கியின் முன்னால்
நீள்கின்ற இருளைத் தவிர

''அவர்கள்''
எந்தச் சந்தடியுமின்றி யிருக்கிறார்கள்,
எப்போதாவது
''பரா'' வெளிச்சத்தில்
மங்கலாய்த் தெரிகின்ற
தொங்குபாலம்.
நீள்கின்ற தெருவும்
எருக்கலம் பற்றைகளும்
அன்று பார்த்ததாய்
மனதில் விரியும்.
இந்த நாட்களில்
அவையும் மாறியிருக்கலாமென்பதை
நம்ப மறுப்பதாய் மனது.

அப்போதெல்லாம்
யன்னலோர இருக்கையில்
காற்று முகத்திலடிக்குமாறுதான்
நானிருப்பேன்.
''வடக்கு றோட்'' டில்
விரைவாய் நகர்கிற
எச்ச மரங்கள்
மண்கும்பான் வெளியில்
மேற்குப் பார்த்த
பிள்ளையார் கோயில்
மாரியில் கடலாய்

கோடையில் தரவையாய்
விரிந்து கிடக்கிற
வெளிகளைத் தாண்டியதாய்
என் பயணம் தொடரும்.
சத்தமிட்டுத் திறக்கின்ற
தகரப் படலையினுள்ளே
என் வீடு.
முன்னால் விரிந்திருக்கும் மாமரம்
எப்போதும் நான்
போட்டுக்கொண்டிருக்கும் கதிரை.
அவசரமாய் புறப்பட்டபோது
அதை
எடுத்து வைத்ததாய் ஞாபகமில்லை.

உழன்று உழன்று
அமுத்தும் நினைவுகளூடு
நம்பிக்கை மட்டும்
பலம் கொள்கிறது.

எப்போதாயினும் ஒருநாள்
நான் போயே தீருவேன்
ஜன்னலோர இருக்கையில்
காற்று
முகத்திலடிக்குமா றமர்ந்து

அது வரையில்
தொலைவினை நோக்கி நோக்கி
எரிவுறும் கண்கள்.

''அவர்கள்''
சந்தடியற்றிருக்கிறார்கள்.
எந்நேரமும்
சந்ததம் கொள்ளக் கூடும்.

வரலாறு தன்னை மீட்கும்

அந்தமில் தமிழே எங்கள்
ஆவியே தாயே உந்தன்
முந்தைய பெருமை எங்கே
முத்தமிழ் திருநா டெங்கே
கங்கைகொள் வீரம் எங்கே
கடாரமின் றெங்கு தாயே
சிந்தையில் இவற்றை யெண்ணா
சிறுமையுள் வாழ்ந்தோம் வீணர்.

முந்தையோர் நாட்டில் எங்கள்
முதுசமாம் வீரம் இன்றி
சிந்தையில் செயல் அகற்றி
சிறப் பெலாம் இழந்து நிற்கும்
விந்தையை நினைந்நாற் பாரில்
வேதனை முகிழ்த் தெழுந்து
தந்தையர் நாட்டின் சேதி
தணலினைக் கொட்டி த்தூவும்.

விந்தைகள் எங்கே என்று
விரிந்த இவ்வுலகில் பார்க்கும்
சிந்தனை கொண்டோர் கூட
குறித்திட மறுத்த தாலே
சிந்திக்க வைத்தார் அந்தச்
சிறுத்தைகள் என்றே பேச
இங்கிதம் நிறைந்த நாடு
தமிழீழம் ஒன்றே கேளீர்.

சந்தமுத் தமிழை நாளும்
சாற்றி நீ வாழ்ந்த போதும்
சிந்தனை தன்னைச் சற்று
திருப்பி நீ பாராய் இங்கு
வந்திடு பகையை வெல்ல
ஈகத்தால் அரண்கள் செய்யும்
சந்ததி வாழும் நாளை
சரித்திரம் படைக்கும் பாரீர்.

வங்கமா கடலின் ஓரம்
வளர் தமிழ் நாடொன்றுண்டு
சங்கமுத் தமிழும் நாட்டின்
சரித்திரம் யாவும் மீட்கும்
சிந்தையில் உயர்ந்த கூட்டம்
சிறுத்தைகள் என்று பாடி
வந்தனை செய்து நிற்கும்
வரலாறு தன்னை மீட்கும்.

வளவை வளவன்

□□□

என்னில் வீழ்ந்த மழைத்துளி

ஒரு மழைத்துளி
முகத்தில் வீழ்ந்து,
சிதறிப் பரந்தது.
ஆயிரம் வெள்ளித் துண்டுகளாய்ப்
பரவியது அது-
அர்த்தமுள்ள-
அற்புதமான துளி!

இன்னும் மண்ணில்
அதே துளிகள்...

வானம்
ஞாபகத்தை கிளறி
வேடிக்கை பார்க்கிறதோ!

என் வயல்களை,
குளக்கட்டை,
காற்றைத் தழுவும்
மரங்களை
ஞாபகம் நனைத்தது.

ஒரு மழைத்துளிக்குள்
இத்தனை சக்தியா?
இழப்பு என்பது
இருப்பிற்கான வழியென ஆனபின்-
பிறப்பிற்கும்
இறப்பிற்கும் கூட
இடைவெளி இல்லாமல் போயிற்று.

சந்தோஷமும்
வருத்தமும்
சரிசமனாயின.
முகத்தில் வீழ்ந்த துளி
என் முகவரியை
சொல்லியது.

காலையில் கால் தடவும்
புற்களும்
காட்டிலிருந்து செவி நனைக்கும்
குயில்களும்
கார் காலத்தில்
திட்டுத் திட்டாக
என் வயல்களின் மேலால்
மிதந்து செல்லும் மேகங்களும்
எனக்கே உரியவை.

நாளை
இவற்றை நான் காண்பேன் என்ற
நம்பிக்கை தருகிறது
இந்த மழைத்துளி!

வவுனியா திலீபன் □□

0 0 0 0 0 0 0

சரித்திரங்கள்

அடம்பனூர் செ. திருமாறன்

என் உயிருக்குள்
நிலைத்த உயிரே... என்
தோழமையின் தொடக்கமே...
இந்த மனவெளியில் கணங்களாய்
பிறந்துகொண்டிருக்கும்
காலத்தின் பதிவே...
தொடரும் யுகங்களெல்லாம்...
என்னை
தொடரப் போகும் நினைவே!
நிழல் தேடி
நினைவிழந்த... மனிதர்க்கு
நிழல்கொடுக்க
பரந்த பாலை வெளிகளில்
வளர்ந்து
சருகாகிப் போன... உன்
நினைவுகள்.. இந்த
இதயத்தை நிரப்பிக்கொண்டன.
நீ... சருகான போது
சகிக்காமல்... என் இதயம்
சல்லடையாகிப் போனது...
ஆனால்
சருகுகள் நிறைந்து
சாவோலங்கள் எழுந்த போதுதான்
நீ சருகான சாமச்சாரம்
நம் சரித்திரத்தின் — புது
சரித்திரமென்று
சகித்துக் கொண்டு
சந்தோசப்பட்டேன். □□

தலை தெறித்த மனிதர்கள்

கருணாகரன்

என்ன நிகழ்ந்தது?
யாரின் கைகால்களை
எந்தத் தேவதை வருடியது?
வேர்கள் பற்றி எந்தக் கவலையுமின்றி
மரங்கள் பறந்தன வானத்தில்.

இலைகளா வேர் பிடித்துக் கிடப்பது?

புராணங்களையும் இதிகாசங்களையும்
கழுகுகள், காகங்கள், நரிகள் பற்றிய கதைகளையும்
மறந்துபோன மனிதர்கள்
புன்னகை பூத்துத்திரிந்தார்கள்.
தோண்டிய கண்கள்
தானமாக வழங்கப்படுமாம்
பிடுங்கிய பற்கள்
திருப்பித் தரப்படுமாம்
இனி
தொட்டதெல்லாம் பொன்னாகும் காலமொன்று
நாற்பத்தாறாவதோ ஐம்பத்தாறாவதோ அதிசயமாக
தங்கள் ஊர்களுக்கு வந்து விடப் போகிறதென்று
கனவு கண்டார்கள் அவர்கள்.

கொன்றைமரம் பருவந்தவறியும் பூத்தது
புன்னையோ பூவரசோ எதுவோ எல்லாம் பாடத்தொடங்கின
இன்னும் ஏதோ ஆடின.

புறாவின் வருகைபற்றியும்
அதன் மகிமைபற்றியும்
மரத்தோடு மரம் பேசியது
விஷமேறிய புற்களையிட்டு இனிக்
கவலையில்லையென்று மாடுகளெல்லாம் கத்தித்திரிந்தன.

மாரியா கோடையா என்றறியாக்காலத்தில்
விதைப்புப்பற்றியும் அறுப்புப்பற்றியும்
குழம்பிக் குழம்பி
தலைதெறித்துக் கிடந்தார்கள்
என் மனிதர்கள்.

நெருப்பைத் தின்னும் காலமென்ன
தீர்ந்தா போச்சுதென்று
மனம்பெருத்த மனிதன் கேட்டான்
உண்மைதான்.

சிங்கமென்ன வாளைக் கீழேயா போட்டுவிட்டது? □□

o o o o o o o

ஊர் வீதி

எங்களூர்த் திண்ணைகள் அடைமழைக்குப்பின்
ஈரமாகிய கனவுகள் சுமக்கும்.
குத்து விளக்கும் கும்பமும் சூடிய
சித்தம் அழகியார்சிறுகை கூப்பினர்.
ஊதுகுழலும் குரும்பைச் சிறுதேரும்
அந்த இளமைக் காலத்து அழகியல்

எங்கள் கிராமத்திற் சூரன்போர் என்றால்
சொல்லில் அடங்காச் சிங்காரம்.
சூரன் மாவில் ஏறிவருதலும்
கோவிலைச் சுற்றிச் சுழல்வதும்
அந்த இளமைக் காலத்து அழகியல்.

அந்தக்கிராமத்து அழகைத் துறந்து
எங்கெங்கோ எல்லாம் ஓடிப்பறந்த காகங்கள்!
மெல்ல விரிந்த கிராமத்துப் புல்வெளியில்
ஆலமரங்கள் அழகாய் வளர்ந்தன-
நீண்ட நெடிய தூண்கள் பரப்பிக்
கால ஓட்டத்திற் கால்கள் பரப்பின.
மீண்டும் அந்தக் கிராமத்திற்
புதிய கனவுப் பூக்கள் மலர்ந்தன. □□

சபா. ஜெயராசா

ஆன்மீக பூமிக்கு அணியிவைகள் பராபரமே!

ச. வே. பஞ்சாட்சரம்

ஆள்விழுங்கி விருட்சம்பல்
லாயிரங்கல் தொலைவினிலே
அங்கெங்கோ உளதென்று
அறிந்திருந்தோம் பராபரமே!
ஆள்விழுங்கி மரமெங்கள்
அருகிருப்ப தின்றறிந்தோம்!
அதிர்ந்தோம்! துடிக்கின்றோம்!
ஐயையோ பராபரமே!

பூரண கும்பங்கள்
பொலியவைத்து வரவேற்றுப்
பூரண துன்பங்கள்
புண்சுமந்தோம் பராபரமே!
சேரியராய் உலகமெல்லாம்
சிறுமையுறத் தன்மைந்தர்
திமிர்வேறு! ஆரியராம்!
சிரிப்பே பராபரமே!

காக்கவந்த போர்வையிலே
கழுத்தறுத்த கனவான்கள்!
கழுத்தறுத்த கைவெந்துங்
கண்திறவார் பராபரமே!
கூக்குரல்கள் எழும்படியாய்க்
'கூப்பிடுவான்' நோய்அதற்குள்!
கொளுத்தளம்மை, ஏந்துகிறான்
கொள்ளிகளே பராபரமே!

"வாங்கிவந்தேன் ஒரு வாழை
மரம்! ஆனால் அதுதாழை
மரமாக மாறியது"
பாடுகிறான்! எமை நகைத்தோ?
ஆங்கவனே நிறம்மாறா
அவர்பெயரில் படமெடுத்தான்!
ஆன்மீக பூமிக்கே
அணியிவைகள் பராபரமே!

கொடுக்கக் குறையாமல்
கூடுசெல்வம் கல்வி! அதைக்
கொடுத்தவனேல் உலகுக்குக்
குறள்மதியேன் பராபரமே?
எடுத்துச்சா மானியர்தன்
ஏடெல்லாஞ் சென்றுவிட
இவன்சாமா னியன்,ஏழை
இந்நாள் பராபரமே!

சுத்திதரப் பத்துமுறை
சுடர்த்திருமால் இறங்கிவந்துந்
தோல்விகண்ட தேசத்தின்
துரோகம்கோடி பராபரமே!
செத்துக்கொண் டிருக்கும்எம்
தேசத்தைப் பார்த்திரங்கு!
தெய்வமுன்னில் பெரியரேனும்
திமிர்பார் 'பராபரமே!

"யாவுங்கற் புனை*" நாவல்
ஆகிவிட வேதங்கள்
அம்முனிவர் குலக்கதைகள்
அளக்கின்றான் பராபரமே!
சாவுண்ணா றாயிரவர்
தவமுனிவர் சாதனைகள்
தமையழிக்கப் பார்க்கின்ற
சாமியிவன் பராபரமே!

,,உன்னைப்போல் பிறரையும் நீ
நேசி'' என்ற உத்தமன்சொல்
உன்னைப்போல் பிறரையும் நீ
யோசி என்றே ஓர்ந்தானோ?
ஒன்றுபட வையென்னல்
ஒன்றுமின்றிப் பட்டழிய
ஒழித்திடெனும் உரையென்றோ
உணர்ந்தான் பராபரமே?

நாய்க்குட்டி மூஞ்சிகளை
நரித்தனமாய் உரோஞ்சிவிட்டு
நாட்டுநலன் கண்டருசி
நம்பேச்சு வார்த்தையிலும்
வாய்க்காதா மணமக்கள்
படுக்கையறைத் தரகுமென்று
வாய்நீர் வடிக்கின்ற
மன்னவன்தான் பராபரமே!

முப்புரத்தில் முதற்புரந்தான்
மூளாமல் தப்பியதோ?
முதலைமிக்குப் பாற்கடலின்
முகுந்தனோடி ஒளிந்தானோ!
அப்பமன்று பங்குவைத்த
அக்குரங்கு செத்திலதோ?
அலிபாபா, இருபத்து
நான்குகளோ பராபரமே?

கடல்கோள்கள் விழுங்கிடலாம்!
கொள்ளை நோய்க் கனலெழலாம்!
கைமுந்தி அணுக்குண்டுங்
கணப்போதில் சாய்த்திடலாம்!
இடிவிழலாம்! நிலநடுக்கம்,
எரிமலைகள் அழித்திடலாம்!
இவைவருமுன் இவன்நெஞ்சில்
ஏற்றொளியைப் பராபரமே!

□□□

புலி வீரனே...!

லோஜினி சிதம்பரப்பிள்ளை

□□□

ஈழத்தைக் காக்கவே கருவிலே உதித்திட்ட
எங்கள் புலி வீரா
ஈனரை அழித்திடவே பாதம் பதித்திட்டாய்
என்றும் உனை நாம் மறவோம்!

கொஞ்சி விளையாடும் பிஞ்சுக் கழுத்தினிலே
நஞ்சை ஏந்திட்டாய் வீரா — உன்
அஞ்சா நெஞ்சத்தைப் பாருக்கு உணர்த்தி
விஞ்சும் புகழ் காணுவோம் நாமே!

துள்ளித் திரியும் வேளையிலே
துப்பாக்கியுடன் சென்றாய் — நீயும்
பள்ளி செல்லும் பருவத்திலே புலிப்
படையணி சேர்ந்து வந்தாய்!

அடிமை வாழ்வை எமக்களித்த
அன்னியரை விட்டொழிக்க
வேஷம் வேண்டாம் எமக்கென்று
வேங்கையாய்ப் புறப்பட்டீர்

ஈழமண்ணின் விடுதலைக்காய் சென்ற —எம்
ஈழப்புலி வீரரை — நம்
நெஞ்சினிலே பதித்திடுவோம்
அவர் வழியில் வாழ்ந்திடுவோம்! □□

துயிலெழுச்சிப் பாடல்

தில்லைச்சிவன்

பொழுது புலர்ந்தது, யாம்செய்த தவத்தால்
புகழ்ப்பிர பாகரன் தோன்றினன்; அதனால்
தொழுது அடிமைசெய் தொழும்பத் தமிழர்
தொன்றைப் புகழ்நிறீஇ எழுந்தனர் புலியாய்,
பழுதறு வீரம் பரந்தது உலகம்
பார்த்து வியந்து போற்றினர்; தமிழே!
அழுது அழுது அடிபட்ட வாழ்வு
அகன்றது, ஈழம் மலர்ந்தது பாரேன்.

புண்ணியப் பொருண்மிய மேலவர் ஒருபால்,
புலமை மிகுந்தநற் புலவர்கள் ஒருபால்,
நண்ணிய நாவலர் காவலர் நாப்பண்
நாடறிந் தபலர் கூடிநின் றார்க்க,
திண்ணிய தோள்வலிப் புலிப்படை வீரர்
திரளொடு வேல்விழிச் சேனையுஞ் சேர்ந்து
''மண்ணிநல் வண்ணமே வாழ்கென'' வாழ்த்த
வண்டமி ழேகண் விழித்தெழு வாயே!

ஆற்றல் மிகுபுலி வீரர்செந் நாவாம்
அகலிடத் தேபயின் றாடிய அன்பே!
மாற்றலர் எங்கோ மடிந்தனர், இருள்போய்
மறைந்தது, ஈழ மணித்திரு நாடு
தோற்றிய தாண்மையில், புலிக்கொடி எங்கும்
துய்ய ஒளிச்சுடர் வீசின வாடைக்
காற்றிடைப் பாய்ந்து பறப்பதைக் காண
கடிமலர்க் கண்விழித் தெழுகவெம் தாயே.

அரும்பசி தாகம்நோய் யாவையும் வென்று
அன்னைத் தமிழைச்சிங் காசனத் திருத்த
கரும்புலி வீரர்தம் உயிரையா யுதமாய்
கண்டனர், இதற்கணுக் குண்டோஎத் தரமோ!
விரும்பி உயிர்தரும் வீரரைப் பெற்ற
விமலி! யுனைவெல்ல நினைத்தவர் இன்றோ
கருங்கடற் பரப்பிலும் தரையிலும் எங்கும்
கட்டழிந் தோடுதல் காணக்கண் விழிமே. □□

கருப்புலி வெடித்தது

இ. யனார்த்தன்

என்ன நடந்திற்று?
என்ன தான் நடந்திற்று?
பலாலியருகே அழகான கிராமமெல்லாம்
தலை மூழ்கிப்போன பின்னும்
எறிகணைக்கு எட்டாத எல்லையிலே
தொங்குகின்ற தொட்டிலதில்,
சின்னக்குழந்தையாய்
நள்ளிரவில் கண்ணயரும்
வண்ணக் கிராமமது-
திடுக்கிட்டு விழித்திற்று.
இத்தனை நாளாய் கேட்காத பேரிடி
ஒற்றையடியாவது எதிரி
எடுத்து வைத்திருப்பானோ?
ஆருடத்தில் அடிவயிறு பற்றிற்று
திண்ணைகளில் குடும்பங்கள் திரிசங்காய்...
நிறைமாதம் இன்றோ நாளையோவென
நிறைந்த நெல்வயல்கள்.
பூவும் பிஞ்சுமாய் கத்தரியும் மிளகாயும்.
பட்டிநிறைந்த நித்திலங்கள்.
புது மண்வீட்டிற்கு நிலைநிறுத்தி
கட்டிய தோரணங்கள்
இன்னும் காயவில்லை.
பொட்டு நிலவு கூட
நிலத்தில் கொட்டிவிடாது
பொலிந்திருக்கும் விருட்சங்கள்.
இத்தனையும் விட்டு விட்டால்
இவர் வாழ்வு?
கண்துஞ்சாக் கவலையுடன்
பொழுது விடிந்திற்று.
விடயம் தெரிந்திற்று.
நள்ளிரவில் விடிந்தகதை
அறிந்திற்று.
கரும்புலிகள் வெடித்த
கள ஓசையென்று,
விடிகாலை வேளையதில் புதிதாய்
நாலுவயலில் புழுதி எறிகின்றார்.

காலத்தின் கட்டளை

கனகாம்பிகை கதிர்காமன்

காரிகை புயலாய் மாறி
காலத்தின் பதிலாய் வந்தாள்
கூரிய வேலின் கூம்பை
குளிர்ந்தவள் நோக்கி நோக்கி
வீரியம் பெற்றாள் வில்லின்
விண்ணதில் அம்பாய் மாறி
காரியம் கண்டோம் கப்பல்
காலையில் கரைந்து போக.

வானிடை விரைந்து வந்து
வாழ்த்துக்கள் கூறும் ஷெல்லும்
மானிடக் குடிகள் மீது
மழையெனப் பொழியும் குண்டும்
மேனிகள் சிதறி ரத்த
வெள்ள மாய்ச் சகதியாயின்
நானொரு கணையாய் மாறி
நாட்டுவேன் கொடியை என்றாள்.

பூவுடல் வெறுத்த மங்கை
புண்ணியம் காத்த தங்கை
நாவினில் உந்தன் பேரை
நல்கிடும் போது மெந்தன்
ஆவியு மழிந்தாலென்ன
'அங்கயற் கண்ணி' யுந்தன்
சீரிய செய்கையா லே
சிகரமாய் ஆனாய் அம்மா.

மேனிலை யடையுமுந்தன்
முயற்சியு மீழங் காணும்
சாவினை வாழ்வாய்க் கொண்ட
சரித்திரமுந்தனாகும்
நாடதில் முதலாம் பெண்ணாய்
நாமுனை போற்றி நின்றோம்
காவியத் தலை வீயுந்தன்
கால்களின் கீழே நாங்கள்.

●● ஈழத்தமிழ்க் கவிதை உலகின் முன்னணிக்கவிஞர்களில் ஒருவராக மிளிரும் தங்களின் வாழ்க்கைப் பின் புலத்தையும் கவிதைத் துறைக்குத் தாங்கள் வந்த வழித்தடத்தையும் அறிய விரும்புகின்றோம்;

□□ முன்னணியில் இருக்கின்றேனா இல்லையா என்பதைக் காலம்தான் நிர்ணயிக்க வேண்டும். எனது பின்புலத்தைச் சொல்லலாம். தமிழ்ப் புலமைவாய்ந்த—அல்லது 'எழுத்துத்துறையில் ஈடுபட்ட - குடும்பப் பின்னணி எனக்கு வாய்த்ததில்லை. என்தாய்மாமனாருடைய சுருட்டுக் கொட்டில் நான் வளைய வந்த களம். வாழ்க்கையின் அடிமட்டத்தைச் சேர்ந்த சுருட்டுத் தொழிலாளர்கள் புராண இதிகாசங்களை நன்கு தெரிந்துவைத்திருந்தார்கள். அங்கே 'படிப்பு' நடக்கும். இரத்தின நாயகர் அன் சன்ஸ் 'பெரிய எழுத்துப்' பாரதக்கதையை ஒருவர் ராகத்தோடு வாசிப்பார்.

வசனந்தான். ஆனால் புராண படன பாணியில் வாசிப்பார். 14, 15 வயதில் எல்லாம் பாடசாலை விடுமுறைக் காலத்தில் நானே வாசிப்பதுமுண்டு. என் பெரியதகப்பனார் ஒருவர்; மகாவிவேகி. பாரதம், ராமாயணம்

தலைசிறந்த கவிஞராக விளங்கும் கவிஞர் சோ. பத்மநாதன் அவர்கள், ஆழ்ந்த தமிழ்ப்புலமையும் நிறைந்த ஆங்கில அறிவும் இணைந்த செயல்கள்மூலம் எம் மண்ணுக்குப் பெருமை சேர்ப்பவர்களில் ஒருவர். இவரது கவிதைகள் அழகும், பொருட்செறிவும், நெஞ்சில்வந்து சுருக்கெனக்குத்தும் வேகமும் கொண்டு திகழ் கின்றன. மரபில் தோய்ந்து புதியன தேடும் இவரின் வழித்தடத்தைப் பின் பற்றி பல புதிய கவிஞர்கள் உருவாக்கம் பெற்றுள்ளனர். கவியரங்குகளில் இவர் கவிதை சொல்லும் பாங்கு அலாதியானது.

விடுதலைக்காகப் போராடும் எமது மண்ணின் தேவையுணர்ந்து, உலகின் பல போராட்டக்கவிதைகளைத் தமிழில் மொழிபெயர்த்துத் தந்து எமது போராட்

எல்லாம் தலைகீழ்ப்பாடம். அவர் கதை சொல்லும் பாணி அற்புதமாக இருக்கும். மற்றைய தொழிலாளர்கள் அவரைத் தூண்டி விட்டு, ஆவலோடு காத்திருப்பார்கள். வெற்றிலையைத் துப்பிவிட்டு மனிசன் கதைசொல்லத் தொடங்கினால் கேட்டுக் கொண்டே இருக்கலாம். இத்தனைக்கும் அவர்ஒருபகுத்தறிவுவாதி. கந்தபுராணம் படிப்பார். ஆனால் சிலகட்டங்கள் வரும்போது "எப்பிடிப் புளுகு!" என்றுகேட்டு விட்டுச் சிரிப்பார்.

என் மாமனார், பெரியதகப்பனார் எல்லோரும் கிருபானந்தவாரியாருடைய ரசிகர்கள். எனக்குப் 10வயதிருக்கலாம். வாரியார் யாழ்ப்பாணத்தில் மாதக் கணக்காகத் தங்கி இருந்து ஊர்தோறும் பிரசங்கம் செய்துவந்தார். எங்கு பிரசங்கம் நடந்தாலும் மாமனார்என்னையும் கூட்டிச்செல்வார். [அப்பொழுது கேட்டதொன்றும் நினைவில்லை] ஆனால், 1954-1955 காலப்பகுதியில் வாரியார் செய்த விரிவுரைகளைக் கேட்டுக்குறிப் பெடுத்திருக்கிறேன். இன்று திரும்பிப் பார்க்கையில், அத்தகைய 'நாவன்மை

நேர்காணல்

கவிஞர்

சேர. பத்மநாதன்

நேர்முகம்

கருணாகரன்

படைத்த ஒருவரை நான் கண்டதில்லை. என்றே கருதுகின்றேன். எனக்கு அருணகிரியாரை அறிமுகப் படுத்தியவரே அவர்தான்.

●● உங்கள் கவிதையில் அருணகிரியின் செல்வாக்கு இருப்பதாகச் சொல்கிறார்கள்?

□□ சந்த விகற்பங்கள் என்னைப் பெரிதும் கவர்வதுண்மை. வாரியார் பேச்சு எனக்குத் தமிழிலக்கிய அறிமுகமும் ஆயிற்று என்று சொல்ல வந்தேன்.

அடுத்த பின்னணி யாழ்-இந்துக் கல்லூரிப் படிப்பு. அங்கேதான் வித்துவான் கார்த்திகேயனிடமும் ஏரம்பமூர்த்தி மாஸ்டரிடமும்

டத்துக்கு வலுச்சேர்ப்பவர். ஆபிரிக்கக் கவிதைகளில் அலாதியான ஈடுபாடுமிக்கவர். நாடகம், விமர்சனம் போன்ற துறைகளில் இவரது பங்களிப்புக் கணிசமானது.

இவர், இப்பொழுது பலாலி ஆசிரிய கலாசாலையின் உபஅதிபராகவும் அங்கு ஆங்கில விரிவுரையாளராகவும் கடமையாற்றுகின்றார். மனித நேயமும் சமூக அக்கறையும், எமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் இணைவும் கொண்ட இவரிடமிருந்து இன்னும் ஏராளமானவற்றை இந்தமண் எதிர்பார்த்து நிற்கிறது.

சிவராமலிங்கம் அவர்களிடமும்
தமிழ்படிக்கக் கிடைத்தது.
நல்லகவிதையை என் காதில்
போட்டுவைத்தவர்கள் அவர்கள்.
எனக்கு ஆங்கிலம் கற்பித்த
மு. கார்த்திகேசன் பொதுவுடைமை
வாதி; மாபெரும் மனிதாபிமானி.
வாழ்க்கைபற்றிய என் நோக்கில்
அவர் செல்வாக்கும்
இருந்தே தீரும்.
நான் ஆசிரியத் தொழிலுக்கு
வந்தபிறகு சந்தித்த மேதை
கலாநிதி கு. சிவப்பிரகாசம்.
பெரிய பெரிய படிப்பாளிகளையெல்லாம்
சந்தித்திருக்கிறேன்.
சிவப்பிரகாசத்தாரைப் போன்ற
சிந்தனையாளன் ஒருவனை நான்
கண்டதில்லை.
என் பின்புலத்தில் இவர்களும்
இன்னும் சிலரும் இருக்கிறார்கள்.

●● பழந்தமிழ் இலக்கியத்துடன் உங்களுக்கு ஈடுபாடு அதிகம்; புலமையும் உண்டு. இவை தங்களின் கவிதை உருவாக்கத்தில் எப்படி உறுதுணையளிக்கின்றன?

நாம் சூனியத்திலிருந்து
தோன்றியவர்களல்ல. நீண்டதோர்
இலக்கிய மரபின் வாரிசுகள்.
சங்க இலக்கியம், நீதிநூல்கள்,
பக்தி இலக்கியம், நாட்டார்
இலக்கியம், பாரதி என்றெல்லாம்
பன்முகப்பட்ட தமிழ்
இலக்கியத்தோடு ஓரளவேனும்
பரிச்சயம் இருப்பது எனக்கு
அனுகூலம். பழந்தமிழ் இலக்கியத்தில்
காலூன்றி நிற்கிறேன்.
''என்பாட்டன் பார்த்த உலகம்
ஒன்று. என் அப்பன் பார்த்த
உலகம் வேறொன்று.
பாட்டன் தோளிலும் அப்பன் தோளிலும்
ஏறி நான் பார்த்த உலகம்
பிறிதொன்று''
நான் முந்தையோர் தோள்களில்
நிற்கிறேன். நீண்டதூரம்
தெரிகிறது.

●● இலக்கியம் படித்தவர்களால் தான் சிறந்த கவிதைகளைப் படைக்க முடியும் என்று சொல்லுகிறீர்களா?

□□ அல்ல. திருகோணமலைக்கவிராயர்
என்று ஒருவர். ஒரு தொழிலாளி
அதிகம் படித்தவர் அல்லர்.
அநாயாசமாகக் கவிபாடுவார்.
சு. வில்வரத்தினம் எவ்வளவு
பெரிய படிப்பாளி என்பதை
அவர் கவிதை சொல்லும்.
சு. வி புதுக்கவிதைதான்
எழுதுகிறார். அதற்குள்
லயம் இருக்கும்.
செந்நெறிப்பாங்கான
அவருடைய மொழியாட்சியை
ரசிக்கிறவன் நான்.

●● தங்களின் கவிதைகளுக்கு அலாதியான வீச்சும், அழகும், மரபில் தோய்ந்த இறுக்கமும் இருப்பதாக நாம் கருதுகின்றோம். இந்தப் புலமைப் பின்னணியையும், புதுக்கவிதை பற்றிய தங்களது கருத்தையும் சொல்லுங்கள்:

□□ மரபுவழி வடிவங்களையே நான்
பெரிதும் கையாளுகிறேன்.
அவற்றினூடு சமகாலப்
பிரச்சினைகளைச் சொல்வதில்
எனக்குச் சிரமமில்லை.
பழைய வடிவங்களில் பழைய
செய்திகளையே சொல்லிக்கொண்டிருக்கும்

பண்டிதர்களும் தோற்றுப்
போகிறார்கள்.
மரபும் தெரியாமல்,
புதுக்கவிதையின் பண்பும்
புரியாமல் சொற்றொடர்களை
அடுக்கும் ''பாமரர்களும்' தோற்றுப்
போகிறார்கள்.

●● புதுக்கவிதைபற்றி...?

□□ யாப்பு விதிக்கும் கட்டுப்பாடுகளை
பொருட்படுத்தாதது புதுக்கவிதை.
அலங்காரம் எதுவுமின்றி

- புனைவு இன்றி - கவிஞன்
தன் கருத்தை சுயம்புவாகத் தருவது
புதுக்கவிதை எனலாம்.
புதுக்கவிதையாளர்
உருவகங்களையும் படிமங்களையும்
அடுக்குகிறார்கள்.
புதுக்கவிதைபற்றி என்கருத்தைக்
கேட்கிறீர்கள்.
பண்டிதர்கள் பலர் எப்படி யாப்பு
என்ற சட்டகத்தை [frame]
வைத்துக்கொண்டு வெற்றுச்
சொற்களை அடுக்குகிறார்களோ,
அப்படியே பெரும்பாலான
புதுக்கவிதைக்காரர்கள்
சட்டகமின்றியும் - தெளிவான
கருத்தின்றியும் - வெற்றுத் தொடர்களை
அடுக்குகிறார்கள். இரண்டுமே
கவிதையில்லை.

●● கவிதை என்றால் என்ன?

□□ மிகச் சிறிய வடிவத்தில் அதிகம்
சொல்லக்கூடியது கவிதை.
கவிதை சொல்லும் செய்தியைவிட
சொல்லாத செய்தியே அதிகம்.
இதை, குறிப்பால் உணர்த்தும்
உத்தி (*Suggestion*) என்பர்.
எல்லாவற்றையும் வெட்ட
வெளிச்சமாகச் சொல்லும் வேலையை
உரைநடை செய்யும்;
அதற்குக் கவிதை
தேவையில்லை.
செய்யுளைப் பலர் கவிதை
என்று நினைக்கின்றார்கள்.
நமது நிகண்டு, வாகடம் எல்லாம் செய்யுள்;
கவிதை அல்ல. இளங்கோவும்
பாரதியும் தருவது கவிதை.

●● மரபு, புதுமை என்ற குரல்கள் இன்று வழக்கழிந்து போனாலும் ஒரு எல்லைக்குள் வரம்புகட்டி நிற்கும் மரபுக்கவிதைக்கு இருக்கும் வீச்சிலும் பார்க்க உடைத்துப் பீறிடும் புதுக்கவிதைகள், கவிஞனுக்கும் வாசகனுக்குமிடையே நெருக்கமான உறவை ஏற்படுத்துவதாக சொல்லப்படுவதுபற்றி உங்கள் கருத்தென்ன?

□□ முன்பே சொல்லிவிட்டேன்;
மரபுக்கவிதை, புதுக்கவிதை
இரண்டிலும் போலிகள் உள.
மரபுக்கவிதையைவிட புதுக்கவிதைக்கு
வீச்சு அதிகம் என்ற வாதத்தை

ஒப்புக்கொள்ளமாட்டேன்.
''கல்வெட்டு'' எழுதுபவர்களால்
மலினமாக்கப்பட்ட
அகவற்பாவில், புதுவை இரத்தினதுரை
ஆற்றலுள்ள கவிதை
தந்திருக்கின்றார்.
[''எழுக என் தங்காய்,
எழுக என் தங்காய்'']
கட்டுப்பாடுகள் மிகுந்த
வெண்பா யாப்பில் முருகையன்
''அது—அவர்கள்'' என்ற
நெடும்பா பாடியுள்ளார்.
கட்டளைக் கலிப்பாவில்
பாரதி ''சுயசரிதை''
பாடியிருக்கிறான்; ''மஹாகவி''
''ஒரு சாதாரண மனிதனது சரித்திரம்''
பாடியுள்ளார்.
காமராசனும் மேத்தாவும்
வைரமுத்துவும் தம்
புதுக்கவிதைகளால் நிற்கிறார்கள்.
இப்பொழுது எழுதுபவர்களில்
பசுவய்யா, கல்யாண்ஜி,
மனுஷ்ய புத்திரன்,
பழமலை
வாசுதேவன், முரளீதரன்
ஆகியோர்
குறிப்பிடத்தக்கவர்கள்.
அதேவேளை கவிதைப்பண்பு
எதுவுமில்லாத போலிகள்
புற்றீசலாய்ப் புறப்பட்ட வண்ணம்
இருக்கின்றன.
வெற்றிபெற்ற புதுக்கவிதைகள்
பல ஓசைநயம் வாய்ந்தவை.
''வாகைமரம் பூச்சூடும்
வயல்வரம்பை நெல்மறைக்கும்
மஞ்சள் வெயில்தெரியாது
மழைமுகில்கள் கவிந்துவரும்''
இது புதுக்கவிதை என்று
நினைத்தால் ஏமாந்தீர்கள்;
இது யாப்பமைதி பேணும்
மரபுக்கவிதை.
கவிஞனுக்கும் வாசகனுக்கும்
எப்படியும் நெருக்கமான உறவு
இருக்கவே செய்யும்.
திருவாசகமும் அருட்பாவும்
காலம் கடந்து மக்கள்
இதயங்களைத் தொட்டே
வருகின்றன.
கவிஞன்—வாசகன் உறவுக்கு ஒரு
பொதுவான தளம் வேண்டும்.
வாழ்க்கை பற்றிய கவிஞனுடைய
நோக்கும் வாசகனுடைய நோக்கும்
சந்திக்கையில் இந்த உறவு ஏற்படும்.
உதாரணமாக, ''மாநிலம் பயனுற
வாழ்தல்'' பாரதியின் நோக்கு.
சாதாரண மனிதனின் மேன்மையைப்
பாடுவது 'மஹாகவி'யின் நோக்கு.

●● கவிதையின் காலப்பணி...?

□□ கவிஞர்கள் தீர்க்கதரிசிகளாகக்
கொண்டாடப்பட்டிருக்கிறார்கள்.
அவர்கள் சமூகத்தில் தோய்ந்தும்
தோயாமல் விலகியும்
நின்று பார்க்கிறார்கள்.
(அவர்களுடைய உணர்வுகள்
மிகவும் நுண்மையானவை)
அவர்கள் காலத்தின் குரலாய்
ஒலிப்பார்கள்; பிறர்
காணாததைக் காண்பார்கள்;
பிறர் காட்டாததைக்
காட்டுவார்கள்.

●● ஆங்கில மொழிப்புலமை நிறைந்த தாங்கள், பிறநாட்டுக் கவிதைகள் பலவற்றை ,மொழிபெயர்த்துள்ளீர்கள். குறிப்பாக போராடும் தேசங்களில் புலர்ந்த கவிதைகளை அறிமுகம் செய்துள்ளீர்கள். அந்தக் கவிதைகளுக்கும்எமது கவிதைகளுக்குமுள்ள ஒப்பியல்புகளையும் வேறுபாடுகளையும் அறிய விரும்புகின்றோம்?

□□ ஆங்கிலம் வாயிலாக நான்
பிறநாட்டுக் கவிதைகளைப்
படிக்கின்றேன்.
ஆங்கில இலககியம்
ஆங்கிலேயர்களுடைய
இலக்கியம் என்றநிலை
இன்றில்லை.
ஆபிரிக்கா, மேற்கிந்தியத்தீவுகள்,
இந்தியா, இலங்கை ஆகிய
நாடுகளில் இருந்து வருபவையும்
ஆங்கில இலக்கியம் என்ற
அங்கீகாரம் பெறுகின்றன.
இவற்றுள் என்னைப் பெரிதும்
கவருவது ஆபிரிக்க
இலக்கியமே!

●● அதற்குக் காரணமென்ன?

□□ ஆபிரிக்காவுக்கும் ஆசியாவுக்கும்
பொதுவான அம்சங்கள் பல.
புவியியல் அமைப்பில் இருந்து
சமயம், சமூகக்கட்டமைப்பு,
பண்பாடு என்பவற்றில் ஒற்றுமைகள்
அதிகம். குடியேற்ற ஆட்சியின்
கீழ் இருசாராரும் ஒரே விதமான
அனுபவத்தைப் பெற்றவர்கள்.
சொல்லப் போனால்
ஆபிரிக்கர்கள் ஆங்கிலேய,
பிரெஞ்சிய, பெல்ஜிய
வல்லாதிக்கத்தோடு மோதித் தம்
தனித்துவத்தை இழந்திருக்கிறார்கள்.
அதை மீட்டெடுக்கும் பணியில்
ஈடுபட்டிருக்கிறார்கள்.
இங்கே எமது தனித்துவத்தை
— அடையாளத்தைக் — காக்க
ஒரு போராட்டம் நடக்கிறது.
இந்நிலையில், ஆபிரிக்க இலக்கியம்
எமக்கு எழுச்சிதரும்,
எம்மைத்தூண்டுமென்று
நம்புகின்றேன். நான் மொழி
பெயர்ப்பதில் முக்கியமானவை
ஆபிரிக்கக் கவிதையே!

வேறுபாடுபற்றிச் சொல்வதானால்
ஆங்கிலத்தில் அல்லது பிரெஞ்சில்
ஆபிரிக்கர்கள் எழுதுகிறார்கள்.
பலருக்கு அவை முதலாம்
மொழிகள். இங்கே
எமக்கு ஆங்கிலம் இரண்டாம்
மொழிதான்.
அந்நியமொழியில் தொடர்ந்து
எழுதத்தான் வேண்டுமா
என்று மாநாடுகளில் அலசுகிறார்கள்.
இதே கேள்வியை லக்தாஸ விக்கிரமசிங்ஹ
என்ற [ஆங்கில] கவிஞர்
கேட்டிருக்கிறார்.

●● தமிழில் இருந்து ஆங்கிலத்துக்கு ?

□□ ஓம், சொல்ல மறந்து போனன்.
எமது எழுத்துக்களை ஆங்கிலத்தில்
பெயர்க்கும் வேலையும்
எனக்கு உவப்பானதே. என்மொழி
பெயர்ப்புகள்
Journal of South Asian Literature
என்ற அமெரிக்க
ஏட்டிலும் அண்மையில்வந்த

Penguin New Writing in SriLanka
என்ற பெங்குவின் பதிப்பிலும்
இடம்பெற்றுள்ளமை ஓர்
அங்கீகாரம் எனலாம்
யாழ். பல்கலைக்கழகம் வெளியிடும்
The Third Eye இல் சில
மொழிபெயர்ப்புகள் வந்துள்ளன.
மொழிபெயர்ப்பில், மூலத்தின்
தனித்தன்மையில் ஒரு கூறு [பகுதி]
போய்விடுகிறது என்பதைக்
குறிப்பிடவிரும்புகிறேன்.
ஒன்று சொல்ல வேண்டும்;
நானோ மற்றவர்களோ செய்யும்
மொழிபெயர்ப்புகள் போதுமானவையல்ல.
மிகச்சிலரே இத்துறையில்
ஈடுபடுகிறோம் — குறிப்பாக
தமிழில் இருந்து ஆங்கிலத்துக்கு.

●● கவியரங்கு காலாவதியாகி விட்டது என்றகுரல் இங்கு சிலரால் அடிக்கடி எழுப்பப்படுகின்றது. தங்களைச் சிறந்த கவியரங்கக் கவிஞராகவும் இந்தநாடு ஏற்றுக்கொண்டுள்ளது. எனவே இதுபற்றிய கருத்தென்ன?

□□ கவியரங்கு காலாவதியாகிவிட்டது
என்பது தவறு. கவிதை
காதுக்கே உரியதாகத்தான் இருந்தது.
ஏட்டில் — அச்சில் —
படித்தற்குரியது என்ற நிலைவந்தது
பிற்பாடு. அதை வைத்துக்கொண்டு
'கவிதை கட்புலமாகிவிட்டது'
என்று சிலர் கூறுகிறார்கள்.
''ஏன், எங்களுடைய காதுகளைக்
கழற்றிவைத்து விட்டோமா?''
என்று முருகையன்
ஒருமுறை கேட்டார்.
அச்சில் இருந்தாலும் கவிதையை
வாசிக்கும்போது மனசுக்குள்
ஓர் ஓசைஎழும். வெளியே
ஒலிக்கவில்லை என்பதால் ஓசையில்லை
என்பதாகாது.
கவியரங்கக் கவிதைகள்
காதால் கேட்கப்படுபவை.
அவற்றை ஓசை அழகுபடுத்தும்.
மிக இறுக்கமான நல்ல
கவிதைகள் கவியரங்கில்
எடுபடாது போகலாம். அதுபோல்
கைதட்டுப்பெறும் சில கவிதைகள்
'சப்' என்று இருப்பதும்உண்டு.
கலைஞர் மு. கருணாநிதியின்
கவிதை இந்தவகை.
கவியரங்குக்கு என நான் எழுதும்
கவிதைகளில் ஓசை நயம்
இருக்கும். கேட்போரோடு
உரையாடுவதுபோன்ற ஒரு நடையை
நான் பின்பற்றுகிறேன்.
ஒரு கவியரங்கில் நான் கவிதை
பாடிவிட்டு அமர்ந்ததும் கவிஞர்
மு. பொன்னம்பலம் சொன்னார்;
'மஹாகவியைப்போல இருந்தது'
என்று. எனக்குக் கிடைத்த
உச்சமான அங்கீகாரம்
அது என நினைக்கிறேன்.

●● கவிதா நிகழ்வுபற்றி...?

□□ நுஃமான், சேரன் முதலியோர்
1981 அளவில் இந்தப்
பரிசோதனையைச் செய்யத்
தொடங்கினார்கள்.
ஒரு கவிதையை
எடுத்து நாடகம்போலக்
கூறுபோட்டு வாசிக்கும் புதுமையைத்
தவிர அதில் ஒன்றுமில்லை.
ஒருவன் தன்கவிதையைத் தானே
வாசிக்கும்பொழுது அதில்
தொனிக்கும் சத்தியம், விசுவாசம்,
personal touch இதில்
இல்லை...— 'பார்க்க'
வடிவாய் இருக்கும்!

●● நல்ல கவிஞன் சிறந்த பாடலாசிரியனாக முடியும். ஆனால் சிறந்த

பாடலாசிரியன் நல்ல கவிஞனாக முடியாது என்ற கருத்துப்பற்றிய உங்கள் எண்ணம் என்ன?

□□ மெத்தச்சரி. கவிதை எழுதினாலும்,
இசைப்பா எழுதினாலும் அதில்
கவிதைப் பண்பு இருந்தால்
நம் நெஞ்சைத்தொடும்.
தாகூரின் கீதாஞ்சலி வசனம்தான்;
கவிதையாய்த் தித்திக்கும்.
கண்ணதாசனுடைய
புஷ்பமாலிகாவுக்கு கவிதையின்
வீச்சு உண்டு. நல்ல கவிஞன்
எழுதும் இசைப்பாவில்
கவிதைப்பண்பு இருக்கும்.
வெறுமனே சொற்கூட்டமாக
நிறையப்பேர் எழுதுகிறார்கள்
இசைகூட்டிப்பாடவும்
செய்கிறார்கள்.

●● பாரதிக்குப் பின்னர் கவிதை எழுதாதவனே நல்ல கவிஞன் என்று சிலர் வாதிடுகின்றனரே!

□□ பாரதி ஒரு யுகசந்தி. அவனுக்கு
முன் வாழ்ந்த எந்தக் கவிஞனையும்
விட விசாலமான பார்வை
பாரதிக்கு இருந்தது. கவிஞன்
ஒரு தீர்க்கதரிசி என்று முன்பு
சொன்னேனே, அது பாரதிக்கு
அற்புதமாகப் பொருந்தும். ஆனால்
பாரதிக்குப் பின் தமிழ்க்கவிதை
வீழ்ந்து விட்டது என்பதனை
ஏற்றுக்கொள்ளமாட்டேன்.
பாரதிதாஸன் சில அம்சங்களில்
பாரதியை விஞ்சிவிடுகிறார்.
வேறுசில கொடுமுடிகளைத்
தொட்டவர் நம் ''மஹாகவி''

●● தங்களைக் கவிதை எழுதத் தூண்டும் காரணிகளையும் 'கவிதை

எழுது' என்று பிடித்துலுப்பும் சூழ்நிலையையும் கூறமுடியுமா?

□□ கவிஞனுக்கு — கலைஞனுக்கு —
கூர்ந்து நோக்கும் பண்பு அவசியம்.
தன்னைச் சூழ நடப்பவற்றால்
முதலில் பாதிக்கப்படுபவனும்
அதிகம் பாதிப்படைபவனும்
கவிஞனாகத் தான் இருப்பான்.
படையினர் நயினை
நாகபூஷணி தேரை எரித்து
கோயிலுள்ளே புகுந்து
நகைகளைக் களவாடி, வழிபாடு
செய்துகொண்டிருந்த
பெண்ணொருத்தியையும்
சுட்டபொழுது, நான்பாடியது
''தாயின் மங்கல நாணை
அறுத்தவன்''
1990 ல் போர் தொடங்கியதும்
கறுப்புச்சந்தைக்காரர்,
பொருட்களைப் பதுக்கி
மக்கள் வயிற்றில்
அடித்தபோது பாடியது

''கறுப்புச் சந்தைக்காரர்களே!''
போக்குவரத்துச் சீர்குலைந்த
நிலையில் சைக்கிள்' taxi
ஆகிவிட்டது.
சிறுமியர் தம் அன்னையரைப்
பின்னால் ஏற்றிக்கொண்டு
சைக்கிள் ஓடுவது என்
நெஞ்சைத்தொடும்.
''உன்னி உன்னி உழக்குகிறாய்''
அதன் விளைவு — இவை ஒருவகை.
அநாதரவாய் விடப்படும்
பெட்டைநாய்க் குட்டிகள் என்
மானுடத்துக்குச் சவால்விட
நான் எழுதியது;
''பெண்ணாய் எடுத்தபிறவி''
என்னை 'உலுப்பும்'
எதுவும் என் கவிதைக்குப்
பொருள் ஆகலாம்.

●● நூற்றுக்கணக்கான கவிதைகளைத் தாங்கள் எழுதியபோதும்இன்னும் தங்களது கவிதைகள் ஒன்றும் நூலுருப்பெறவில்லையே. இது என்?

□□ என் ''பாடுகளை'' அறிந்த நீங்களே
கேட்கிறீர்கள். சொல்லத்தான்
வேண்டும். விழித்திருக்கும்
பொழுதெல்லாம் பணி
செய்கிறேன். ஆங்கிலம்
கற்பிக்கும் தொழில். பொதுப்பணிகள் சில.
குடும்பப் பொறுப்புகள். இவற்றுக்கு
அப்பால்தான், எழுத்தும் பேச்சும்.
கடந்தவாரம் ஒரு கல்லூரியின்
ஆங்கிலத்தினத்திலும் மற்றொரு
கல்லூரியின்
தமிழ்த்தினத்திலும் பிரதம
விருந்தினராகக் கலந்து
உரையாற்றினேன். இந்த
வாரம் இரண்டு நூல்களுக்கு
முன்னுரை எழுதிக்
கொடுத்திருக்கிறேன். ஐந்து
நூல்களைப் படித்து தரம்பிரித்து
உள்ளூராட்சி ஆணையாளருக்குத்
தந்திருக்கிறேன்.
என் சக்திக்கு மிஞ்சிய இப்பணிகளோடு
மல்லாடுகையில் உதிரியாகக்
கிடக்கும் என் கவிதைகளைக்
தொகுக்க, செப்பனிட
எதுநேரம்? நம்பினால் நம்புங்கள்;
கடந்த ஈராண்டாக ஒரு
வெளியீட்டாளர் எனக்காகக்
காத்திருக்கிறார்.

●● தமிழ்க் கவிதைப் பரப்பில் சுவடு அழிந்துபோகாத கவிஞராக உங்களைக் கருதுகிறோம்.இதை நிலை நிறுத்திக் கொள்ள நீங்கள் நினைத்திருக்கும் எதிர்காலப் பணி குறித்துக் கூற முடியுமா?

□□ மனிதனுக்கு எப்போதுமே, தன்
சுவட்டை விட்டுப்போவதில்
அக்கறையுண்டு. ஒருகவிஞனாகவே
நான் நினைவுகூரப்பட
விரும்புகின்றேன். நான் இதுவரை
எழுதிய பலதரப்பட்ட கவிதைகளின்
தொகுதி ஒன்றும் ஆபிரிக்கக்
கவிதைத் தொகுதி ஒன்றும்
இசைப்பாத்தொகுதி ஒன்றும்
வெளியிட ஆசை.
அதற்குமேல் வாழநேர்ந்தால்,
சொபோகிளீஸ் இல் ஒன்றும்,
ப்றெஃக்ற் இல் ஒன்றுமாக
இரு நாடகங்களை
மொழிபெயர்ப்பேன். ஆபிரிக்க
நாவல் ஒன்றைத் தமிழுக்குக்
கொண்டு வரவேண்டும்.
அதற்கும் மேலே...
ஆழ்வார்களை, கம்பனை,
திருவாசகத்தைப் படித்தபடி
போய்விடவேண்டும் — சந்ததியின்றி! □□

இது தான் முடிவு இதிலென்ன நான் சொல்ல...!

என்ன அப்படிப் பாக்கிறியள்!...
நரைத்த தலையுடனும்,
சுருங்கிய தோலுடனும் நடந்து-
''பல்லில்லா வாய்க் கிழவி''
இப்படி
உசாராய் வாறாள் எண்டா!

அப்படிப் பாராதையுங்கோ!
நான் பொல்லாத கிழவி.
இப்பவும்
ஐஞ்சு பரப்பு வயல் நெல்லை
கொஞ்சமும் களையாமல்
ஒரு நாளிலை வெட்டுவன்!
இரண்டுபேர் தூக்கியுயத்திய
சுமையை இறக்காமல்
இறக்கிற இடம்வரை சுமப்பன்.
ஓயாமல் உழைப்பன்;
ஒருததரையும் மூந்தவிடன்.

ஏன் அப்படியெண்டாகேக்கிறியள்.
ம்... அதை-
என்னத்தைச் சொல்ல!
அடங்காத் தமிழனென
சிங்கள ஆமிக்கு இஞ்சை,
மடங்காமல் திரிஞ்ச என்ர அவரை—
அடையாளங் காணமுடியாமல்-
ஆக்கியுயிர் போக்கி எறிஞ்சாங்கள்,
ஆக்கினை ஆமியள்!......
ம்... !
குடும்பப் பாரம் என்னிலை விழுந்தது!
ஒரே ஒரு கடுவன்.
உருகி உருகி வளத்தன்...
செல்லமாய், நல்லாய் வளத்து-
காலநேரத்தோட கட்டியும் வச்சன்.
மூண்டைப்பெத்த என்ர மருமள்;
நாலாவதைப் பெறும்போது,
மேல போயிட்டாள்!
கொள்ளிக்கொரு பிள்ளையென
நம்பிவளத்த என்ரமேன்;
ஊருக்கே கொள்ளி வைக்கிற-
காட்டிக் கொடுப்பாளனாகி,
காணாமற்போய் ஒழிஞ்சிட்டான்.

பேரப்பிள்ளைகளைத் தள்ளி,
தூர வைக்கமுடியுமா?
''நாலையும் நான் வளத்தன்''
புல்லுப்புடுங்கினன், அரிவுவெட்டினன்,
நெல்லுக்குத்தினன், அரிசி இடிச்சன்,
கூலிவேலைகள் யாவுஞ் செய்தன்.
பேணி வளத்த மூத்தபேரன்-
போயிட்டான் புலிப்படைக்கு!

முதுகு முறிஞ்சு மூண்டையும்,
முறையா வளக்குறன் — வாளுறன்.
வீட்டை ஒரு நாள்ப்புலிப்-
பெடியளோடு பேரனும் வந்தான்.
ஆமியள் சாக்கொண்ட — என்ர
அவரின் சாயல் அவனில...
பிறகென்ன என்ர பேரன்;
துரோகமிளைத்த தந்தையைக் கொள்ளான்,
அடங்காதபேரனின்சிந்தையைக்கொள்வான்
அடையாளமில்லாமல் ஆமியளை;
ஆக்கி அழிப்பான்;

எல்லாரும் இஞ்சை நல்லாய் வாள;
''தாய் நாடு மீட்க''-
தன்னையுங் கொடுப்பான்.
இதுதான் முடிவு.!
இதிலென்ன நான் சொல்ல!
முதுகு முறிஞ்சு மூண்டையும்...
...................!
புல்லுப்புடுங்க வேணும் ..
நான் வாறன்.!

சு. அரசண்ணா

நெஞ்செலாம் வாழுவான் நீடூழி

ந. கிருஷ்ணசிங்கம்

சத்தியத்தின் வழிநின்று போராடியோர்
சாகடிக்கப்பட்டார்கள் ஆளுவோரால்
நித்தியமும் இந்தநிலை நீண்டபோது
நிலைகுலைந்து தமிழரிங்கு கலங்கிடவே;
உத்தமத் தலைவன் பிரபாகரன்
உதித்தனன் எங்களை உய்யவைக்க!
வித்தகன் விடுதலைப்புலி இயக்கம்
வளர்த்தனன்; எம்மை வாழவைத்தான்!

அண்ணனின் மாதலைமையால் மகிழ்ந்து
அழுகைவிட்டு எழுகவே நாம்விழைந்தோம்.
புண்ணான நெஞ்சுகளில் புதியசக்தி
புகுந்ததெனநாமுணர்ந்து பெருமையுற்றோம்!
எண்ணார்ந்த இடர்பட்ட எமதுஇனம்
கண்துடைத்து கனலெடுத்து வந்ததுவே.
மண்மீட்க மாகலங்கள் கொண்டபடை
மண்மீது நமதெனவே நிமிர்ந்ததுவே!

தாக்குதல் படைநடத்தி தலைவருமே
தடுமாறி ஓடவைத்தார் சிங்களத்தை.
ஊக்கமொடு உரிமைப்போர் உயர்ந்து
உன்னதங்கள் படைத்தனவே உலகினிலே!
ஏக்கமதை போக்கியெமை காக்கவே
எழுந்தமாவீரர் உடல்வித்தாய்போக
தீக்கண்கள் திறந்து பல்லாயிரராய்
திரண்டு தலைவன்பின் பிறவிகொண்டார்!

பெண்களும் முரசறைந்து முன்னேவர
அண்ணனே ஆக்கினான் அனைத்துமே.
ஆணோடு அரிவையரும் ஆயுதங்கள்
அணிந்து களம்வென்றார் அற்புதமாம்!
பெண்கடற்புலி அங்கையற்கண்ணி
பாரதிரப் படைத்தாளே சாதனையே!
இன்னும் நளாயினி; மங்கைமேலும்
எதிரிகப்பல் எரியவென உயிரேதந்தார்!

உடலுளம்யாவும் உயர்ந்தபடை
கடல் நிலமெங்கும் விளங்கவைத்தான்.
படைமுகாம்; கப்பல் பலவுமிங்கே
உடையவே தலைவன் தலைமைதந்தான்!
படைகள்அழிய உயிராயுதத்தால்
படைத்தனர் பலவெற்றி கரும்புலிகள்.
நடைபெறா தியாகமா தீரங்களே
நடத்துவான் தலைவனே நாடதிர;

நேரிய கொள்கையால் நாடும்நிமிர
வீரியம் எங்கும் விளங்கிஉயர
சீரிய ஒழுக்கம் சிறந்துவளர
கூரியகவனம் காட்டுவான் தலைவன்!
பாரினில் தமிழீழ விதையோ...
வேரினைவிட்டு விருட்சமேயாக
நீருமேயாகிட செய்தனன் மக்களை!
நெஞ்செலாம் வாழுவான் - நீடூழி தலைவனே!

□□

நிச்சயம் இது நிலைக்கும்

புதியவள்

தேசத்திற்காகவே
தேகம் உருக்கிய உத்தமர்களே!
நீங்கள் சென்ற பாதை கொடியது.
ஆனால் உன்னதமானது, உறுதியானது.
உங்கள் பாதங்கள் தடம்பதித்த
அந்த புனிதமண்ணிலிருந்து — இன்று
ஆயிரம் ஆயிரம் வேங்கைகள்
துளிர்த்தெழுந்து நிமிர்ந்து நிற்கின்றனர்.
அவர்கள் நாளை
நிச்சயம் உங்கள்
கனவுகளை, நினைவுகளை
நிறைவேற்றுவர் — நீங்கள்
நிம்மதியாய் உறங்குவீர்கள்.

□□

கரும்புலிகள்

தூயவன்

விஞ்ஞானிகளே......!
உங்கள் ஹுமேக்கர்லெவிக்கான தொலைநோக்கிகளை
உளநோக்கிகளாக்குங்கள் — முடிந்தால்
எங்கள் கரும்புலிகளின் உள்ளத்துணர்வுகளை
கணிப்பிட்டுக் கூறுங்கள்.

டார்வினே!
வாழ்க்கைப்போரில்
தக்கன பிழைக்குமென
தர்க்கமாய் உரைத்தீரே!
கரும்புலிகள் என்ன
வாழத் தகுதியற்றவர்களா?

வரலாறே!
ஒருமுறையுன்னைப் புதுப்பித்துக்கொள்.
கரும்புலிகள் எனும் அத்தியாயத்தை
உன்னோடு புதிதாகச் சேர்த்துக்கொள்.

கவிஞர்களே!
கற்பனையில்கூட தர இயலாத
கரும்புலிகளைக் கருத்தோவியங்களாக்க
உவமான உவமேயங்களுக்காக
எங்கே போகப் போகின்றீர்கள்?

கடலலையே!
விடலைப் பருவத்துக் கரும்புலிகள் — உன்னோடு
விளையாடியதெல்லாம் தங்கள்
உடலோடு உயிரை அழித்திங்கு — பகைவன்
படகோடு அவன் உளவுறுதியை
உடைத்தெறிவதற்காகவா?

தாரகைகளே!
உங்கள் கண்சிமிட்டலில் கரும்புலிகள்
தங்கள் உடலை வருத்தியதெல்லாம்
எங்கள் எதிர்காலச் சந்ததியின்
மங்காத ஒளிர்விற்காகவன்றோ!

உயிரை சுமந்து திரிதல்
எவ்வளவு கடினமானது என்பது
இப்போதுதான் தெரிகிறது.
உயிர் பாரமாய் அழுத்துகையில்
மானமும் வாழ்வும் நசிகிறது.

காற்றென இருந்த உயிர்
கனமானது எங்ஙனம்...?
வெடியோசைகள் உலுப்பிய
ஓர் பின்னிரவில் தான்
அது நடந்தது.
அந்த நொடிப்பொழுதில்
பாரமாய் உயிர்
அவனைப் பற்றிக்கொண்டது.
ஊர், சுற்றம், உறவு, வீடு என
அனைத்தையும் உதறி
உயிர் அவனைத்தள்ளியது.
தலைமீது உயிரைச்சுமந்து
ஓடிவந்தான்.

பிரதான வீதி
உருக்குலைந்த கட்டடம்
இன்று அவன் உறைவிடம்.
அருகேயுள்ள முனியப்பரிடம்
தினசரி சொல்கிறான.
அப்பால் சென்று கடலைப்பார்க்கிறான்.
எதுவுமே தெரியாதது போல்
ஒன்றுமே புரியாதது போல்
மௌனமாய் விரிந்து கிடக்கிறது
கடல்.
கரைமணலில் கால்புதைய
கடல்கடந்து விழியெறிந்து
அவன் நிற்பான்.
கலங்கலாய் தெரியும்
அவனது மண்.
கையசைப்பதாய்
சில பனைகள்.

உயிரைச் சுமத்தல்

□

விவேக்

பிரிவின் துயரம்
சிறகு கட்டிக்கொள்ளும்.
தூக்கமின்றி
இரவுகள் தொடரும்.
மூலையில் சுருண்டுபடுக்கையில்,
மேலே உடைந்து தொங்கும்
'கொங்றீட்' சுவர்
என்றோ ஓர் நாள்
அவன் தலையில் விழலாம்
அவன் இப்போது அதற்கு
கவலைப்படுவதில்லை.
அவன் உணர்கிறான்
'உயிர் பிரிதல் சாதாரணமானது
உயிரோடு ஒன்றைப்பிரிதலே
மிகவும் கொடுமையானது.' □□

யார் அனுமதித்தது?

சத்துருக்கன்

நடுநிசியில்
நாய்குரைத்து தூரஓடியது.
சடாரென எழுந்து
சுற்றும் முற்றும் பார்த்தவிழிகளில்
பாரம் நிறைந்தது.
எதிரில் நின்ற
கருமையைக் கண்டு,
உயிர் வரண்டு போயிற்று.

புரியாத பாஷைகள்
அறியாத அன்னிய முகங்கள்
சூழவந்த இனிய தென்றலைத்தடுத்து
துர்நாற்றம் சூழ்ந்தது.
இருளிலும்,
வன்மம் பூத்த அந்த விழிகள்
நெஞ்சைத் துளைத்தன.
பேச்சில் தெரிந்தது,
வெறிபிடித்தோரென்று.
சற்று முன்பெல்லாம்
இனிய காற்றில் இதமாய்தூங்கினேன்
ஏன் இந்த திடீர் மாற்றம்?
அருகில் நின்ற நாய்க்கு
பிடிக்காத நாற்றம்
எனக்கு எப்படி இதமாகும்?
இதுவரை நான் சுவாசித்த
இதந்தரு காற்றில்
தூசிபடர்ந்து மாசடைவதா?
துர்நாற்றம் வீசுவதா? ☐☐

துவண்ட நெஞ்சுக்கு ஓர் ஆறுதல்

நெடிய உருவமொன்று
கரிய சுவரொன்றில் எழுத வந்தது

சூழ்ந்தது அவனை ஒரு கூட்டம்
"16-8-94
கடற்படைக் கப்பல்கள் அழிக்கப்பட்டன......"
தொடர்ந்தன அவன் கரங்கள்.
ஏமாந்த கூட்டம்மெதுவாக நழுவியது
ரேடியோக் கடையருகே தேர்தல் செய்திகேட்க.

துவண்டது என் நெஞ்சம்; உற்று நோக்கினேன்.
சென்றவரின் தலைமுடியெல்லாம் வெளுப்பு
அருகில் நின்ற வாலிபன்,
"அந்தப் பீரங்கிகள் கிடைத்திருந்தால்..." என்றான். ☐☐

மயன் — 2

உணர் வெழல்



செ. பொ. சிவனேசு

எதை யெண்ணி முடங்க
நான்
ஏன் கலங்க?
இழந்து போனேன் வயற்பரப்பை
ஆயினும், மண்வெட்டியை அல்ல
பறிகொடுத்தேன் கடற்பரப்பை
படகினை அல்ல
எரிக்கப்பட்டவை எனது ஆலைகளே
எனது பொறிகள் அல்ல!
எனது மூளை, எனது உணர்வு
நரம்பு, நாடி, குருதி
எல்லாவற்றுக்கும் மேலாக எனது உழைப்பு
இன்னமும் என்னவையே!
ஊக்கம், தீரம், திடம் திரண்ட தலைமை
பின்னுக்குக் குதி தள்ளாப் போர்ப்படை
இன்னமும் எனக்காகவே!
பிறகு,
எதையெண்ணி முடங்க
நான் ஏன் கலங்க?

எனக்கொருவரம் வேண்டும்!

எனக்கொரு வரம் வேண்டும் — அது
ஆயிரம் ஆயிரம் கரங்களாய் வேண்டும்.
மாண்ட எம் மைந்தரின்
காலடித் தடங்கள் நாளைய
கால வெள்ளத்தில அழியாதிருக்க
புழுதித் தூற்றல்கள் படியாதிருக்க
பூமிதனில் நிலையாயிருக்க
கைகளால் பொத்தி அணைத்திட
எனக்கொரு வரம் வேண்டும் — ஆண்டவா
ஆயிரம் ஆயிரம் கரங்களாய் வேண்டும்

— பரணி —

தமிழ்த்தாய் வெளியீடான

தமிழீழத்தின்
51 கவிஞர்களின்

காலம் எழுதிய வரிகள்

□

மதிப்பீடு

செம்பியன் செல்வன்

“இக்கவிக்கோவை — போராட்டச் சூழலில் வாழும் பல்வகை மாந்தர்களின் மனஉணர்ச்சி'வெளிப்பாடுகளின் பதிவுகள் மட்டுமல்ல; தமிழீழ மண்ணின் போராட்ட வரலாற்றுப் பதிவும் கூட என்ற எண்ணமே மேலெழுகிறது”

கவிதானுபவம் என்பது அதுகூறும் பொருளால் (காதலால்) இன்பம் பயப்பது; (வீரத்தால்) மயிர்க்கூச்செறிய வைப்பது; பக்தியியலுக்குச் சுருதி சேர்ப்பது போன்ற 'செக்கு மாட்டுத்தட'ச் சிந்தனைகளும், வழிகாட்டலும் சுயானுபவமான கவிதா இலயிப்புகளுக்கு ஊறுவிளைவித்துக் கொண்டிருக்கும் காலம்.

மரபு மீறி எழுந்த சுயேச்சா கவிதைகளும், புதுக்கவிதைகளும், பாரதி வழிவந்த வசன கவிதைகளும் இன்று, அவை ஏன் அவ்வாறு எழுந்தன? என்ற அடிப்படை நோக்கங்களை மறந்து போயின.

தத்துவார்த்த - தனிமனித, சமூக சூக்கமச் சிந்தனைகளாகவும், விடுகதைகளாகவும், நொடிகளாகவும் (அப்துல்ரஹ்மான்) பழமொழிகளாகவும், இளஉள்ளங்களில் தளிர்விடும் காதல் மிளற்றுகளாகவும், விளங்குகின்றனவேயன்றி, மனிதன் வாழும் காலம்' அவன் நடத்தைகள் பற்றிப் பேசுவனவாக இல்லை.

இறுக்கமான உவமை, உருவகம், படிமம், சொல்லலங்காரம் என உறவுகொள்கின்றன. இவையாவும் எங்கிருந்து பிறக்கின்றன? எவரிடமிருந்து எழுகின்றன? கவிதை யாருக்காக படைக்கப்படுகின்றது? என்ற சிந்தனைகள் கவிஞர்களிடம் எழாது போய் விடுகின்றது. அதிலும்-

தமிழக கவிஞர்களிடையே புரட்சி, சமூக மாற்றம் போன்ற சிந்தனைகள் போலிகளாகவும், ஆழமற்றதாகவுமிருந்து வருகின்றன. இவர்கள் கற்பனைகளில் புரட்சியையும், மாற்றத்தையும் வேண்டி நிற்பவர்கள்.

ஒரு 'மகாகவி' விண்ணப்பிக்கிறான் பாருங்கள்-

புரட்சி வரும் போது
எழுப்பி விடுங்கள்!
அதுவரை கொஞ்சம்
தூங்கிக்கொள்கிறேன். — புலி

சமூக மாற்றத்துக்கு ஒருகவி குரல் கொடுக்கிறான்-

இந்த
பூமி உருண்டையைப்
புரட்டி விடக்கூடிய
நெம்பு கோல் கவிதையை
உங்களில் யார் பாடப்போகிறீர்கள்
— மு மேத்தா

ஆனால் எங்கள் நாட்டிலே குட்டிச்சுவர்கள் கூட உயிர்க் கவிதையைப் பாடுகின்றன.

ஒரு உண்மையான புரட்சியை, சமூக மாற்றங்களைக் கண்டு கொண்டிருக்கும், நாடு நமது.

ஆகவே எங்கள் கவிதையில்-கவிதையும் இருக்கும், புரட்சியும் இருக்கும். இரண்டின் உன்னத பிணைப்பு அதில் ஆதார சுருதியாக விளங்கும்.

'கலையை உணர்ச்சி வெளியீடு என்பதனை விட, அழுத்தமாக நிதர்சனத்தைப் பதிவு செய்தல் எனச் சொல்லலாம் நிதர்சனத்தின் பதிவுகள் உணர்ச்சி வரிகளாக விழுகின்றன. ஆகவே தான் கலைஞன் என்பவன் நிதர்சனத்தை உணர்ந்து வெளிப்படுத்தும் ஒரு பாத்திரம் என்ற வகையில் முக்கியமானவன் ஆகிறான்... 'கவிதையில் கலைஞனின் சிந்தனை ஒரு அறிவு பூர்வமாகவும், உணர்வுடனும் சேர்ந்து இயங்குவது போல...' — என்று 'நிழல்கலை' என்ற கட்டுரையில் தருமு சிவராமு குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

ஆனால், புரட்சி இலக்கியங்கள், போராட்ட இலக்கியங்கட்கு மாறானவர்கள் பல கருத்துக்களை, கொச்சைப்படுத்தப்பயன் படுத்துவர். இவைதான் உண்மையான புரட்சி என்று கூறி விமர்சனமும் செய்ய முற்பட்டு, புரட்சியை திசைதிருப்பி விடவும் முனைவர்.

ஒருமுறை தனது பேட்டி ஒன்றில் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தலைவர், யாசிர்-அரபாத் - 'புரட்சியின் மசி' அதற்கு வெடி குண்டினுடைய சுகந்தம் உண்டு. புரட்சியின் துப்பாக்கியை முறியடிப்பதற்கு முன்னோடியாக அவர்கள் புரட்சியின் எழுதுகோலுக்கு எதிராகத்தான் முதலில் சதித்திட்டத்தை உருவாக்குகிறார்கள்' — என்று கூறியதும் கவனத்தில் கொள்ளத்தக்கது.

'காலம் எழுதிய வரிகள்' என்ற இக் கவிதைக்கோவையில் 51 கவிஞர்கள் இவர்களில் 13 பெண் கவிஞர்கள், 19 இளங்கவிஞர்கள், 03 மாவீரர்கள்- இடம் பெற்றுள்ளனர். இக் குறிப்புக்கவிதைக் கோவையின் முக்கியத்துவத்தை ஏதோவொரு வகையில் உணர்த்துவது

முருகையன் முதலான முதுகவிஞர்களிலிருந்து தெல்லியூர் ஜெயபாரதி வரையிலான இளங்கவிஞர்கள் ஒரு கோவையில் ஒப்ப இடம் பிடிப்பது கூட புரட்சியினது விளைவு தான்.

'அன்னை' தந்த பால்
ஆடு தந்ததோ,
மாடு தந்ததோ ..

என்ற சத்யாவேசமான வரிகள் என் காதில் இன்றும் ஒலிப்பவை.

தமிழீழ வரலாற்றில்- கவிதை, போராட்டம் ஆகிய இரண்டிலும்-சுவடு பதிப்பவர் முருகையன். அவரது பாடல்களும், தத்துவார்த்தங்களும் போராட்டத்தின் பல்வேறு கட்டங்களைக் குறிப்பன. முருகையன் முழுமையான போராட்டக் கவியாகத் தொழிற்படுகிறார் என்பதைத் தற்கால அவரது படைப்

புகள் காட்டுகின்றன. போராளிகளுக்காக 'புதுக்குறள்' படைக்கத் தொடங்கி விட்டதைப் பாருங்கள்:

> தற்கொடை என்ப, தமிழீழ
> மைந்தர்கள்
> நிற்கும் புதிய நிலை.

புதுவை இரத்தினதுரை புரட்சிகரப் பாடலை இன்று எழுத ஆரம்பிக்கவில்லை. அவர் மாணவப்பருவத்தே எழுதிய 'வானம் சிவக்கிறது' முதலான கவிதைக்கோவையிலிருந்து இன்றைய 'நினைவழியா நாட்கள்' வரை போராடும் குணமே கவிதையில் தன் முனைப்புக் கொண்டு விளங்குகிறது. தனது கொள்கைபற்றிய நிலையில் தெளிவும், அதனால் பிறக்கும் உறுதியுமே - கவிதைகளுக்கு என்றில்லை - எல்லாக் கலைகளுக்கும் நீதி வழங்கும். அந்தநீதி எக்காலத்திலும் அழிவதில்லை. அழியாதவை மெய்ப்பொருள். மெய்ப்பொருள் பாடுபொருளாகும்போது கவிதை அணி, அலங்காரம் எதுவுமின்றியே இரசிகனின் உள்ளத்தில் அப்படியே பதிந்து விடுகின்றது. திலீபனைப் பாடுகிறார்-

> செத்தபின்னர்
> ஊர்கூடித்
> தேம்புவது தான் இங்கு வழக்கம்
> ஆனால்!...
> ஊரே தேம்பிக்கொண்டிருந்த போது
> மரணித்த வரலாறு...

கல்வயல் வே. குமாரசாமி உருவகத்தில் அரசியற் கருத்துக்களை பேச்சுத்தமிழில் அழகாகப்பாடுபவர்; அவர் பாடல்களைப் படிப்பது ஒரு கருத்தோவியத்தைப் பார்ப்பது போன்ற சுகானுபவத்தை ஊட்டும். கிராமிய மெட்டில் வார்த்தைகள் கவியாடும். அவரது கவிதையும் இடம்பெற்றுள்ளது.

நாவண்ணன் - இவனா என் பிள்ளை— என்று கேட்டிருக்கிறார். போராட்டம் — தலைமை — விளைவு ஆகியவற்றை அழகாக 'அப்பா'வித்தனமாக கேட்டு எங்களை நெகிழவைத்துள்ளார்.

சாருமதி — புதுவையை நினைக்கும் போது உடன் நினைவில் வருபவர். அவர் மட்டக்களப்புத்தமிழில்கவிதை தந்துள்ளார்.

'கௌதம புத்தருடன் — ஒரு கவிதா நேர்காணல்' என்னும் கவிதையை ஜெ. கி. ஜெயசீலன் எழுதியுள்ளார். இது ஈழத்தமிழர் நிலையை சிங்களவர் மத்தியில் கொண்டு செல்லும் முயற்சி. நல்ல கவிதைகூட.

கி. பி அரவிந்தன் 'இனி?' என்றொரு கேள்வி கேட்கிறார்.

> எனக்கென்றொரு
> வீடு
> இனி
> அதுவும் இல்லையென்றாயிற்று.
> இனி...

ஒரு போராளியை தனது கவிதையில் இப்படிக் காணுகிறார்; இன்னொரு கவிஞர்.

> அவன் விடுதலையின் குறியீடு
> சுதந்திரத்தின் படிமம்

தொண்ணூறுகளின் பின்னர் மக்களிடையே நன்கு தெரிய வந்த வவுனியா—திலீபன், செ. பொ. சிவனேசு, மைதிலி அருளையா போன்றோர் குறிப்பிடத்தக்க கவிதைகளை எழுதியுள்ளனர்.

நிதர்சன் — ஒரு நெய்தல் — என்ற கவிதையில் படைப்பியலும், பதிவும் ஒரு இணை கோட்டில்தொழிற்படுவதைகாட்டியுள்ளார்.

கப்டன் கஸ்தூரி, இ. சிவானந்தினி, மீரா. விநோதினி, கப்டன் வானதி. 'நாமகள்' மேஜர் பாரதி, கௌதமி, இராஜி சண்முகநாதன், தூயவள் — போன்றோரின் படைப்புக்கள் 'போராட்டமும் பெண்களும்' என்ற தலைப்புகளில ஆராயப்படக் கூடியவை இவர்களுள் கப்டன்கஸ்தூரி, கப்டன்வானதி தூயவள் போன்றோரின் படைப்புகள் தனி நூல்களாகவே வெளிக்கொணரப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கவிக்கோவை — போராட்டச் சூழலில் வாழும் பல்வகை மாந்தர்களின மன உணர்ச்சி வெளிப்பாடுகளின் பதிவுகள் மட்டுமல்ல; தமிழீழ மண்ணின் போராட்ட வரலாற்றுப் பதிவும் கூட என்ற எண்ணமே மேலெழுகிறது.

மதிப்பீட்டுரை

அடேல் ஆனின்

(Adele Ann)

'UNBROKEN CHAINS'
[உடையாத விலங்குகள்]



"இது ஒப்பனைகளை ஒத்தியெடுத்த யாழ்ப்பாணத்து உண்மை முகம்"

☐ நிலாமகள் ☐

பெண் அடிமைத்தனத்தின் உடைபடாத விலங்காக - யாழ்ப்பாண சமூக அமைப்பில்-புரையோடிப்போயிருக்கும் சீதனமுறைமையை தோலுரித்துக்காட்டும் ஒரு நூல் ஆங்கிலத்தில் வெளிவந்திருக்கின்றது.

'அடேல் ஆன்' எழுதிய இந்தச் சமூக ஆய்வு நூல், சீதனமுறைமையின் குரூர முகத்தையும், அதன் தோற்றுவாய்களையும் துல்லியமாகப் புட்டுக்காட்டி - நீண்ட நெடுங்காலமாகவே எமது சமூகத்தில் நிலவி வரும் ஒரு சமூக அநீதியை விளக்கிக் கூறுகின்றது.

நிலப்பிரபுத்துவசொத்துடமையின் அறுபடாத வேராக நிலைத்து நிற்கும் பொருள் உறவுகளுடனும் - சாதியத்துடனும்; சீதன வழக்கம் பின்னிப்பிணைந்து கிடப்பதை சுட்டிக் காட்டும் நூலாசிரியை அதனை பெண் அடிமைத்தனத்தின் அசிங்கமானமுகமாக விளக்க முனைகின்றார்.

'உடையாத விலங்குகள்' என்ற இந்த நூல் இரு பகுதிகளாக வகுக்கப்பட்டுள்ளது.

முதலாவது பகுதி தேசவழமைச் சட்டம் பற்றியும், அதில் ஒரு முக்கிய அம்சமாக இருக்கும் தாய் வழிச்சொத்துடமை பற்றியும், இந்தச் சொத்துடமை கை மாற்றப்படும் வழிமுறைகள் பற்றியும் விபரிக்கின்றது.

இரண்டாவது பகுதியில்; சீதனமுறைமையின் இன்றைய நடைமுறைகள் பற்றியும், அது தமிழ்ப் பெண்களின் சமூக வாழ்வை எவ்வாறு பாதிக்கின்றது என்பது பற்றியும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண சமூகத்தின் சமூக வாழ்வைத் தீர்மானிக்கும் ஒரு நிர்ணயசக்தியாக-நீண்ட காலமாகவே - தேசவழமைச் சட்டம்

இருந்து வருகின்றது. சமூகத்தின் பாரம்பரிய சம்பிரதாயங்களாக இருந்து வந்த சமூக வழமைகளைத்தொகுத்து தேசவழமைச்சட்டம் என்ற பெயரில் ஒரு சட்டத்தொகுப்பாக ஒல்லாந்தர்கள் உருவாக்கிய வரலாறுபற்றி 'ஆன்' விபரிக்கிறார். இந்தச் சட்டத்தொகுப்பை ஆராயுமிடத்து நிலப்பிரபுத்துவ அம்சங்களும்—சாதிய உறவுகளும் பின்னிப்பிணைந்த ஒரு சிக்கலான பொருளாதாரக் கட்டமைப்பைக் காணக்கூடியதாக இருக்கின்றது என்று 'ஆன்' கூறுகின்றார்.

சாராம்சத்தில் இந்தத் தேசவழமைச் சட்டம் சொத்துடமை பற்றியது. சொத்துடமையின் அடிப்படையில் எழும் சொத்துரிமை உறவுகள் பற்றியது. தேசவழமைச் சட்டத்தை நுணுக்கமாக ஆராயும் 'ஆன்' இந்தச்சட்டம் ஓரளவுக்கு பெண்களுக்கான சொத்துரிமையை நிலைநாட்ட முனைகின்றது, என்கின்றார். இந்தவகையில் இந்தியாவில் தோன்றிய 'இந்து' சட்டங்களைவிட தேசவழமைச் சட்டத்தில் பெண்களுக்கு குறிப்பிட்டளவு சொத்துரிமைப் பாதுகாப்பு இருக்கின்றது என்பதை 'ஆன்' ஒத்துக்கொள்கின்றார். ஆயினும் தேசவழமைச் சட்டத்திலுள்ள சில விதிகள் பெண்ணின் சொத்துரிமை மீது ஆணின் அதிகாரத்தைத் திணிக்க முயல்கின்றது. பெண்ணின் சொத்தை நிருவகிக்கும் பொறுப்பை தேசவழமைச் சட்டம் ஆணுக்கே வழங்கியிருக்கின்றது. அதுமட்டுமல்லாமல் கணவனின் சம்மதமின்றி மனைவி தனது சொத்தை பராதீனப்படுத்த முடியாது என்றும் சட்டம் சொல்கின்றது. இவ்விதம் தேசவழமைச் சட்டம் யாழ்ப்பாணத்துப் பெண்ணின் சொத்துரிமைக்கு விலங்கிடுகின்றது. இந்த வகையில் தேசவழமைச்சட்டம் ஆண்மேலாதிக்கத்தை நிலைநிறுத்த முயல்வதாக 'ஆன்' கூறுகின்றார். இந்த அநீதியான சரத்தை தமிழீழ நீதிநிர்வாகத் துறையினர் சமீபத்தில் நீக்கியுள்ளதையும் 'ஆன்' பாராட்டுகின்றார்.

ஒரு சமூகத்தின் கருத்துநிலையில் அச்சமூகத்தின் சட்டங்களும் கணிசமான அளவில் தாக்கங்களை விளைவிக்கின்றன. இந்த வகையில் தேசவழமைச் சட்டம் யாழ்ப்பாணச் சமூகத்தின் கருத்துநிலையை ஊடுருவி நிற்கின்றது. பெண்களின் தகைமை, அவளின் உரிமை பற்றிய பழமைவாதப் பார்வைகள் இச்சட்டத்தில் பொதிந்து கிடப்பதால் இச்சட்டம் சமூக உறவுகளில் சமத்துவமற்ற தன்மையையும்- ஆண் ஆதிக்கத்தையும் நியாயப்படுத்த முனைகின்றது என்று 'ஆன்' விமர்சிக்கின்றார்.

''சீதனமுறைமையும் — பெண் ஒடுக்குமுறையும்'' என்ற தலைப்பின்கீழான இரண்டாவது பகுதி இன்றைய யாழ்ப்பாணத்தில் நிலவும் மிகவும் மோசமான சீதனவழக்கமுறையை எடுத்து விளக்குகின்றது.

அரச ஒடுக்குமுறையால் ஏற்பட்ட பொருளாதாரச் சீரழிவுகள் ஒருபுறமும், இளைஞர் தலைமுறை ஒன்று பெருமளவில் நாடுபெயர்ந்ததால் எழுந்த சூழ்நிலை மறுபுறமுமாக சீதனக்கொடுப்பனவில் 'டொனேசன்' என்ற ஒரு புதிய அம்சம் தலைதூக்கியுள்ளது. இது காரணமாக தாய்வழிச் சொத்தாக பெண்ணுக்குச் சேரும் சொத்துடமை ரொக்கப் பணமாக மாற்றமடைந்து மணமகனுக்கும் அவனது உறவுகளுக்குமே நேரடியாகப் போய்ச் சேருகின்றது இது தேசவழமைச் சட்டத்தின் வாயிலாக பெண்ணுக்கு ஓரளவுக்கேனும் இருந்த சொத்துரிமையை இல்லாமல் செய்வதுடன் பெண்களை, ஒட்டுமொத்தமாக, பிடிமானமற்ற தங்குநிலைக்கு தள்ளிவிடுகின்றது. இந்த டொனேசன்களின் உச்சவரம்பு உயர்ந்து செல்வதால் பணவசதியற்ற குடும்பங்களைச் சேர்ந்த பெருந்தொகையான பெண்கள் திருமணபந்தத்தை காணமுடியாத துர்ப்பாக்கிய நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளதாகவும் 'ஆன்' சுட்டிக்காட்டுகின்றார்.

சீதனத்தோடு பிணைந்து நிற்கும் பேச்சுத்திருமணமுறையையும் 'ஆன்' சாடியுள்ளார். பேச்சுத்திருமண ஒழுங்கில், அனேகமாக, பெண்களுக்கு, தெரிவுசெய்யும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது. பெண்ணின் சொந்த விருப்புகள் — வெறுப்புகளுக்கு அப்பால் அவளது எதிர்கால வாழ்க்கையை மற்றவர்கள் நிர்ணயித்துவிடுகின்றனர். பல்வேறு அழுத்தங்களுக்குப் பணிந்துபோக அவள் நிர்ப்பந்திக்கப்படுகின்றாள். இந்தப் பேச்சுத்திருமண முறையில் சீதனம் மட்டுமன்றி சாதியம் — சாஸ்திரம் — அந்தஸ்து — அழகு இப்படியான பல்வேறு கட்டுக்களுக்குள் பெண் உரிமை முடக்கப்படுகின்றது. படித்த — தொழில் புரியும் பெண்களும்கூட இதற்கு விதிவிலக்கானவர்கள் அல்ல என்று 'ஆன்' விமர்சிக்கின்றார்.

தமிழ்ச்சமூகத்தில் பெண்களின் வாழ் நிலைத்துன்பங்கள்பற்றி விபரித்துச் சொல்லும் 'ஆன்' உலகெங்குமுள்ளது போல இங்கும் பெண்கள்புரியும் வீட்டுவேலையின் பெறுமானம் கருத்தில்கொள்ளப்படுவதில்லை எனச் சொல்கின்றார்.

வீட்டுவேலையில் செலவாகும் பெண்களின் தொழிலாக்க சக்தி குடும்ப பொருளாதாரத்திற்கு ஆதாரமானது என விளக்கும் 'ஆன்', வேலைபார்க்கும் பெண்கள் வீட்டிலும் வேலைபார்த்து இரட்டிப்புத் தொழிற் பளுவை சுமந்து நிற்பதாக சொல்கின்றார்.

இறுதியாக, தனது முடிவுரையில், பெண்ணின் சொத்துரிமை சட்டரீதியாக பாதுகாக்கப்படவேண்டும் என்று அவர் வலியுறுத்துகின்றார். சீதனமுறைமையை ஒழிப்பதற்கு பரந்துபட்ட பெண்சமூகம் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அதற்காக புரட்சிகரமான வேலைத்திட்டங்கள் செயல்ப்படுத்தப்படவேண்டும் என்றும் கூறுகின்றார்.

எமது சமூகத்தில் சீதனப்பிரச்சனை கூர்மையடைந்து நிற்கும் இவ்வேளையில் இப்பிரச்சனை தொடர்பாக மிகவும் ஆழமான பார்வையுடன் இந்நூல் வெளிவந்திருக்கின்றது. சமூகவியல் பார்வையுடனும் பெண்ணியநோக்குடனும் இந்த மதிப்பாய்வைச் செய்துள்ள 'ஆன்' சிந்தனையைத் தூண்டும் பல கருத்துக்களை இந்நூலில் முன்வைத்திருக்கின்றார். சீதனக் கொடுமைக்கு எதிராக போர்க்குரல் எழுப்பப்பட்டுவரும் இந்தப் போர்க்கால சூழலில் இப்படியானதொரு படைப்பு வெளிவந்திருப்பது வரவேற்கத்தக்கது.

கண்ணைக் கவரும் அட்டை இந்நூலுக்கு அழகுசேர்க்கின்றது.

எமது சமூகவியலாளர்கள் இதுவரை தொடாத அல்லது தொடவிரும்பாத ஒரு சர்ச்சைக்குரிய சமூக நடப்பியலை நூலாசிரியை துணிவுடன் ஆய்வுக்குட்படுத்தியது பாராட்டுக்குரியது.

'வெளிச்சம்'
கலை, இலக்கிய இதழ்

உருவாக்கம்:
ஆசிரியர் குழு

இதழ் அமைப்பு:
இணுவையூர்
சிதம்பர திருச்செந்திநாதன்

ஓவியம்:
தயா, கோபாலி

அச்சு:
ம. மரியதாஸ்

வெளியீடு:
விடுதலைப்புலிகள்
கலை, பண்பாட்டுக்கழகம்

கல்யாண முகூர்த்தப் பிடவைகளின்
கைராசியான முன்னணி நிறுவனம்

திருமாட்டி
புடைவைக் கடல்

மங்கையர், ஆடவர் மனதைக் கொள்ளை கொள்ளும்
வண்ண வண்ணப் பட்டுப் புடைவைகளின் கடல்

திருமாட்டி
புடைவைக் கடல்

122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

நகரத்துக்கு நீங்கள் வரும்பொழுது
வைகுந்தம் பல்பொருள் அரங்கத்துக்கு

நிச்சயம் செல்லவேண்டுமென்று நினையுங்கள்

புடவைகள்
அழகுசாதனப் பொருட்கள்
பாதணிகள்
அன்பளிப்பு பொருட்கள்

ஒரே இடத்திலேயே பெற்றுக்கொள்ளலாம்.

வைகுந்தம்
பல்பொருள் அரங்கம்

17, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

இப்பொழுது அறிமுகமாகியுள்ள புதிய டிசைன்கள்...
தரமான பவுணில் குறித்த தவணையில்
உங்கள் விருப்பத்திற்கேற்ப நகைகளைச் செய்துகொள்ள

லலிதா அணிகலப் பூங்கா

(உரிமையாளர்: செல்லையா இந்திரசித்து)

தங்கப்பவுண் நகை வியாபாரம்

213, லெப். கேணல் சந்தோசம் தெரு,
யாழ்ப்பாணம்.